30

4 - OCT 1930

தொகுதி 9.] 1930ஞு செப்டம்பர்மீ 1உ [பகுதி 8.

மனமோகினி.

ஆசிரியர்
ஆரணி. குப்புசாமி முதலியார்

பிரசுரகர்த்தர்
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த பிரஸ், சென்னை.

மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினி"ச் சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922௵ பிப்ரவரி௴ 1௳ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக்கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்கு முன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச் சோலையின் அற்புதக் கொலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" 'இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்" 'சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி" இரத்தினபுரி இரகசியம் 3-ம் பாகம் என்ற நாவல்கள் முடிவுபெற்று இப்பொழுது இரத்தினபுரி ரகசியம் 4-ம் பாகம் என்கிற நாவல் ஆரம்பமாகி நடந்துவருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ளவேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங்கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரி௴ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0
வெளி நாட்டிற்கு ,, 3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.

அமராவதி 2 பாகமும்	ரூ.	4	0	
பவளத்தீவு 2 பாகமும்	ரூ.	3	0	
ஞானசெல்வாம்பாள் 5 பாகமும்	ரூ.	9	10	0
அர்ஜுனஸிங், சுந்தர்	,,	0	2	0
அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்		1	12	0
கற்பகச்சோலையின் அற்புதக்கொலை	ரூ.	1	4	0
கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும்	,,	3	4	0
இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்	,,	2	0	0
இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்	,,	1	12	0
சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி	,,	2	0	0

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

"தீயால் எவ்வளவு கெடுதி நேர்ந்தது? பிராணபத்து ஏதாவது நேர்ந்ததா? ஸர்தார் சூரியநாயகர் க்ஷேமமாயிருக்கிறாரா?" என்றாள்.

இக்கேள்விகளைக் கேட்ட அம்மாதுக்கு நடந்த சங்கதிகள் ஒன்றும் தெரியாதாகையால் விஷயமே சற்றும் விளங்கவில்லை. இக்கன்னிகை யார்? எங்கிருந்து ஏன் இங்குவந்தாள்? யார் வீடு தீப்பற்றிக்கொண்டது? என்ற ஒருசங்கதியும் சுகசிங்கம் பிரபுவின் வீட்டுக் காரியஸ்தியாகிய அம்மாதுக்குத் தெரியாது.

அப்படி யிருந்தாலும் சூது, தந்திரம், மோசம் முதலிய துஷ்ட குணங்களில் கைதேர்ந்த அப் பிரபுவினிடமிருந்து பழகியவளாதலால் மிக்க தந்திரமாய் இரண்டொரு கேள்விகளைப் பக்குவமாய்க் கேட்டுக் கொஞ்சம் சங்கதி தெரிந்துகொண்டு, எல்லாமறிந்தவள்போல அமிர்தாம்பாளுக்குத் தேறுதல்கூறத் தொடங்கினாள். அதன்மேல் கள்ளங்கபடறியாத அக்கன்னிகை "அப்படியானால் ஸர்தார் சூரியநாயகர் ஒரு ஆபத்துமின்றி சுகமாகவே யிருக்கிறாரென்று கூறுகிறாய்?" என்றாள்.

அம்மாது:—ஆம் ஆம். அவருக்கு ஒரு ஆபத்துமில்லை.

கன்னிகை:—அவ்வீடு முழுதும் அழிந்துவிட்டதோ? அன்னியரே என்னை யாதரிக்கிறார்களோ?

அம்மாது:—மிக்க சேதமே நேரிட்டதாய்த் தெரிகிறது. நீ இங்கு சுகமாய் இருக்கலாம்.

கன்:—அப்பிரபுவா என்னைக் கா[illegible]றினார்

அம்:—ஆம் ஆம். நீ ஸர்தா[illegible]கூறத்தாளோ?

186549

கன்:—இல்லையில்லை. நான் அவரைச் சிலநாழிகைகளாகவே யறிவேன். அவர் என்னைக்காப்பாற்றியவர். இப்போது நான் யார்வீட்டி லிருக்கிறேன்?

அம்:—மிக்க தயாளபுருஷராகிய சுகசிங்கம்பிரபு என்பவரைப்பற்றி நீ கேள்விப்பட்டிருக்கிறாயோ?

அமிர்தாம்பாள் தூக்குத்தண்டனை யடைந்த தேவாரயன் என்பவன் இப்பிரபுவின் சகோதரன் புத்திரியின் கணவனென்று பத்திரிகைகளில் வாசித்திருப்பதால் கபடின்றி "ஆ! அவரைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் மிகச் சொற்பமே. அவர் என்னை யாதரிப்பதை மிக்க கண்ணியமாகவே நான் மதிக்கிறேன்" என்றாள்.

அதன்மேல் அம்மாது சுகசிங்கம்பிரபுவையும் அவர் சகோதரன் புதல்வியாகிய தெய்வயானையையும்பற்றி கூறத் தொடங்கி அவர்கள் குணங்களை மிக்க சிலாகித்துக்கூறி அதோடு தெய்வயானை மிக்க துன்பத்தில் சிக்கி அவதிப்பட்டவளென்று அவள்மேல் இரக்கமுண்டாகும்படி மிக்க தந்திரமாய்க் கூறினாள்.

அதன்பிறகு அவள்பின்னும் தந்திரமாய்ச் சற்றுநேரம் பேசிவிட்டு "குழந்தாய் நான் இன்னும் உன்னை இளைப்பாறவிடாமல் உன்னோடு பேசிக்கொண்டிருக்கலாகாது. நீ சுகமாய் நித்திரைசெய். நான் காலையில் வருகிறேன்" என்று கூறிவிட்டுச் சென்றாள்.

அவள் சென்றதே அவளுடைய கபடநாடகச் சூதைச் சற்றும் அறியாத அமிர்தாம்பாள் நிம்மதியாய் நித்திரை போய்விட்டாள்.

மறுநாள் காலை பொழுது விடிந்ததும் சுகசிங்கம்பிரபுவின் அந்தரங்க வேலைக்காரன் அவரிடம்சென்று இரவு ஒரு

கன்னிகை தானப்பன் முதலியவர்களால் கொண்டுவரப் பட்ட விஷயத்தைக் கூறினன். சற்றுநேரத்திற்கு முன்பு அவன் காரியஸ்தியிடம் பேசிக்கொண்டிருந்ததால் அவள் மூலமாய் அறிந்துகொண்ட அக்கன்னிகையைப்பற்றிய சங் கதிகளைப் பிரபுவிடம் கூறினன்.

அச்சங்கதிகளைக் கேட்ட பிரபு மிக்க வியப்படைந்தார். அப்பெண்ணைக் கொண்டுவந்தவர்கள் எங்கேயென்றபோது வேலைக்காரன் "அவர்களில் ஒருவன் கீழ் அறையில் காத்துக் கொண்டிருக்கிறன்" என்றான். பிரபு நடந்த சங்கதியின் விவரத்தை யறியவேண்டுமென்று மிக்க ஆவலோடு எழுந்து கீழ் அறையிலுள்ள அம்மனிதனைக் காணச்சென்றார்.

அம்மனிதன் நமது கொலையாளியாகிய தானப்பனே. பிரபு அவனை இன்னாரென்றறியார். தெய்வயானையின் கண வன் மடியும்படி நடந்த சதியாலோசனைக்கு இவன் உளவா யிருந்தவனென்றும், இளவரசனை யறிந்தவனென்றும் அவர் அறியார். அவர் அவனை நோக்கி "என்னவேலையாய் என்னி டம் வந்தாய்?" என்றுகேட்டார். தானப்பன் "நான் இரவு கொண்டுவந்த கன்னிகையைப்பற்றிய விஷயமாய் வந் தேன்" என்றான்.

பிரபு:—"என்ன காரணமாய் அப்பெண்ணை இங்கு கொண்டு வந்தீர்கள்?" என்றார்.

தானப்பன் பிரபுவென்று சற்றேனும் அடக்கமாகவும், மரியாதையாகவும் நடந்துகொள்ளாமல் துணிகரமாகவே,

"இதோ பாரும் பிரபுவே! இரவு ஸர்தார் சூரியநாயகத் தின்வீடு தீப்பற்றிக்கொண்டது. நானும் என் நண்பர்களும் அச்சமயம் அங்குகூடிய ஜனக்கூட்டத்தில் கலந்திருந்தோம். திடீலென்று ஸர்தார் தீப்பற்றி எரியும் ஒரு அறையிலிருந்து

இக்கன்னிகையைச் சவத்தைத் தூக்கிவருவதுபோல் தூக்கிக்கொண்டு வந்தார். அவர் இவளைத் தரையில் வைத்தவுடனே மூர்ச்சையாய்க் கீழே விழ்ந்துவிட்டார். இப்பெண் மிக்க அழகாயிருப்பதைக் கண்ட நாங்கள் இவள் தங்களுக்கு மிக்க சந்தோஷத்தை யுண்டாக்குவாளென்று நம்பி உடனே இவளை யொருவண்டியிலேற்றி யாருக்கும் தெரியாமல் இங்கு கொண்டுவந்து விட்டோம்" என்று கூறினன்.

பிரபு:—இதெல்லாம் சரிதான். ஆனல் இவளை என்வீட்டிற்குக் கொண்டுவரவேண்டிய காரணமென்ன? அதுவே எனக்கு விளங்கவேண்டிய விஷயம்.

தானப்:—பிரபுவே இதில் ஒன்றும் மர்மமில்லை. உள்ளது உள்ளபடி கூறிவிடுகிறேன். இதற்குமுன் நான் தங்களையும் தங்கள் மாளிகைக்குள் இருக்கும் இரகசிய அறைகளையும் அங்குள்ள அதிசயமான படங்களையும் சிலைகளையும் பார்த்திருக்கிறேன். அவற்றைக் கண்டபோதே...

பிரபு இம்மொழிகளைக் கேட்டதே மிக்க வியப்புற்று "ஆ! அப்படியானல் நீ......"

தானப்பன் உடனே தன் பெயர் தொழில் முதலிய யாவும் கூறிவிட்டான். அதன்மேல் பிரபு இவனை நன்றுயறிந்துகொண்டு உள்ளே மிக்க வெறுப்பாயிருந்தாலும், அவனை நோக்கி "அக்கன்னிகைக்கும் ஸர்தாருக்கும் என்ன சம்பந்தம். அவள் யார்? உனக்கு அவளைப்பற்றி யென்ன தெரியும்?" என்று கேட்டார்.

தானப்பன் அதன்மேல் நடந்த சங்கதிகளைக் கூறி "ஸர்தார் அவளைச் சிலமணி நேரங்களாகவே யறிவார். அவருக்கும் அவளுக்கும் ஒரு சம்பந்தமுமில்லை. எனக்கும் அவளைப்பற்றி யொன்றுமே தெரியாது. ஆனல் அவள் உருவத்

தைக் கண்டவரையில் அவள் நாணயமும் நாகரீகமுமுடையவளென்றும் நல்ல அந்தஸ்திலிருப்பவளென்றும், மிக்க வனப்பு வாய்ந்தவளென்றும் மட்டும் திட்டமாய்க் கூறுவேன். தாங்கள் இன்னும் அக்கன்னிகையைக் காணவில்லையோ?'' என்றான்.

பிரபு "இல்லையில்லை, நான் இன்னும்பார்க்கவில்லை. அப்படியானால் நீ அப்படங்கள் முதலியவற்றைக் கண்டதால் இப்பெண்ணை யென்னிடம் கொண்டுவந்து விட்டால் நான் சந்தோஷமடைவேனென்று கருதினீர்களோ?'' என்றார்.

தானப்:—பிரபுவே அதுவே யுண்மை. எள்ளளவும் சூதின்றியுள்ளதைக் கூறிவிட்டேன். இனித் தாங்கள் தயவு காட்டவேண்டியதேயன்றி நான் கூறத்தக்கது ஒன்றுமேயில்லை.

பிரபு:—சரி. இதற்கு என்னிடம் என்ன பரிசுக்கு எதிர்பார்க்கிறாய்?

தான:—"பிரபுவே! ஒன்றுமில்லை, ஒரு ஆயிரம் கொடுத்தால் போதும்'' என்றான்.

பிரபு உடனே எழுந்துசென்று தன் கைப்பெட்டியைத் திறந்து நோட்டும் பணமுமாய் ஆயிரம்ரூபாய் எடுத்துவந்து தானப்பனருகில் வந்து, அதை யவன் எதிரில்வைத்து "இதோ! நீ கேட்ட தொகை. எடுத்துக்கொள்'' என்றார்.

தானப்பன் இன்று நமக்கு நல்ல அதிர்ஷ்டமேயென்று எண்ணிக்கொண்டு பணத்தை யெடுத்துக்கொண்டு சென்றான்.

75-வது அத்தியாயம்

சுகசிங்கம்பிரபுவின் மாளிகையில் இருக்கும் இரகசிய அறைகளுக்குப் பக்கத்தறையில் அமிர்தாம்பாள் படுக்க வைக்கப்பட்டிருந்தாள். பிரபு அன்று அந்த அறைகளில் ஒன்றில் சயனித்திருந்ததால் வீட்டுக்காரியஸ்தி மிக்க தந்திரமான யோசனையோடு அக்கன்னிகையை அந்த அறையில் சயனிக்க வைத்தாள்.

பொழுது விடிந்தபின் அமிர்தாம்பாள் நித்திரைவிட்டு எழுந்ததும் இரவு நடந்த சங்கதிகளை நினைத்துக்கொண்டு சிந்தித்தாள். இப்போது தான் இருக்கும் இடத்தைப்பற்றி முன்னமே கேள்விப்பட்டிருக்கிறாள். ஆனால் சற்றேனும் அவளுக்கு சந்தேகமாவது கலவரமாவது உண்டாகவேயில்லை. அவள் மனதில் சூதுவாது, கெட்ட சிந்தனைகள் ஒன்றுமில்லையாதலால் பிறரிடத்தில் அவள் தீயகுணங்களைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. சமீப காலத்தில் துஷ்டரிடம் சிக்கிக்கொண்ட அநுபவமிருந்தாலும் ஒரு பிரபுவின் வீட்டில் தனக்குத் தீங்கு நினைப்போர் யாரேனுமிருப்பார்களென்று அவள் கருதவில்லை, "ஆ மிக்க நேரமாய்விட்டது போலிருக்கிறது" என்றாள்.

காரியஸ்தியாகிய மூதாட்டி அச்சமயம் தான் அக்கன்னிகைக்குக் காலைப்போஜனம் கொண்டுபோனவள் அவளை நோக்கி,

"அதிக நேரமாகவில்லை. ஒன்பது மணிக்கு அதிகமாயிற்று. உனக்குச் சரியான உடைகளில்லை. நான் உடை

கள் வாங்கிவரப் போகவேண்டும். பிரபு நோய் வந்து உன்னைக் கண்டு உன் விஷயங்களைப்பற்றி விசாரிக்க வருகிறார், அவர் உன் தந்தையைப் போன்றவர். அதுவுமன்றி நான் உன் கூடவே யிருப்பேன்'' என்றாள்.

அச்சமயம் சுகசிங்கம் பிரபு அறைக்குள் வந்து அக் கன்னிகையின் க்ஷேமத்தைப்பற்றி விசாரித்தார். அவள் அவர் செய்த உதவிக்கு மிக்க வந்தனமளித்ததே பிரபு அவளை நோக்கி, "ஆ! அழகிய கன்னிகையே! நீ எவ்வளவு காலமாயினும் இம்மாளிகையில் சுகமாயிருக்கலாகும், உன்னைப்போன்ற கன்னிகை எவ்வளவு அதிககாலம் இங்கிருப்பதாயினும் எனக்கு மிக்க சந்தோஷமே" என்றார்.

அமிர்தாம்பாள்:—"பிரபுவே! தாங்கள் செய்யும் உதவிக்கு நான் மிக்க நன்றியுடையவளாயிருக்கிறேன். ஆனால் நான் உங்களுக்கு அதிக தொந்திரை கொடுக்கமாட்டேன். தங்கள் காரியஸ்திமட்டும் சீக்கிரமாய் எனக்கு மட்டும் வேறு உடைகள் வாங்கிக்கொடுத்தால் நான் இந்த நிமிடமே இதைவிட்டுப் புறப்பட்டு விடுவேன்" என்றாள்.

பிரபு:—"நான் உனக்கு இவ்வளவு சௌகரியங்களைச் செய்யும்போது நீ இதைவிட்டுச்செல்ல அவசரப்படுவது அவ்வளவு..." என்றார்.

கன்:—"பிரபுவே! தங்கள் பிரபு வம்சத்தின் ஆசாரம் எப்படி யிருக்குமோ எனக்குத் தெரியாது. ஆனால் என் அந்தஸ்தில் இருக்கிறவளுக்கு, எங்கள் ஆசாரப்படித் தாங்கள் இங்குவந்ததும் என்னிடம் பேசுவதும் மிக்க அகௌரவமான நடக்கையாய்க் கருதப்படும்" என்றாள்.

பிரபு உண்மையாகவே மிக்க மனவருத்த மடைந்தவர் போல்,

"ஆ! நீ என் நடக்கையை மிக்க தவறாய் அர்த்தம்செய்துகொண்டாய், நான் இங்கு இருப்பது உனக்குப் பிரியமில்லாதவரையில் நான் உடனே இதைவிட்டுச் செல்கிறேன்" என்று கூறிவிட்டு வெளியிற் சென்றார். ஆனால் காரியஸ்திக்கு இரகசியமாய் மிக்க சமிக்கை செய்துவிட்டுச் சென்றார்.

பிரபு அறையைவிட்டுச் சென்றதே அமிர்தாம்பாள் மிக்க மனத்தாங்கலடைந்துத் தேம்பியழத் தொடங்கினாள்.

காரியஸ்தியாகிய மூதாட்டி பக்குவமாய் அவளுக்குத் தந்திரமான தேறுதல்கூறி,

"குழந்தாய்! நீ இப்படி நினைத்து விசனப்படலாகாது. பிரபு இரக்கத்தால் உன்னிடம் மனம்விட்டு அப்படிப் பேசிவிட்டார். அவர் குணம் உனக்குத் தெரியாது. அவர் மிக்க கருணையுடையவர்; மிக்க உதாரகுணமுடையவர். உன் விருப்பம் ஏதேனுமிருந்து அதைக் கூறிவிட்டால் அவர் உடனே அவசியம் செய்வார். உன்போன்ற கன்னிகைகளுக்குப் பலவித ஆசைகளிருப்பதுண்டு. நீமட்டும் வாய்திறந்து கூற வேண்டியதே குறை. உன் பிரியமனைத்தும் திருப்திசெய்யப்படும்" என்றாள்.

கன்னிகை மிக்க கலவரமடைந்து "ஓ நீ கூறுவதன் அர்த்தமென்ன? நீ எனக்குமட்டும் உண்மையாய் உதவி செய்தால்......உனக்குப் பரிசளிக்க எனக்கு இப்போது சக்தியில்லை. ஆனால் நான்மட்டும் ஒருமுறை ஸர்தார் சூரிய நாயகரைக்கண்டால் உனக்குத்தக்கப் பிரதியுபகாரம் செய்வேன்" என்றாள்.

மூதாட்டி "ஓகோ! இவள் முன்னமே ஸர்தாரிடம் காதலுடையவளா யிருக்கிறாள்" என்று தனக்குள் கருதிக் கொண்டு அக்கன்னிகையை நோக்கி,

"அப்படியாயின் அவர் வீட்டிற்குச் செல்லவேண்டு மென்று உனக்குப் பிரியமிருக்கிறதோ?" வென்றாள்.

கன்:—"ஆம் ஆம். அவர் என்னை யாபத்திற் காப்பாற்றிய வர். ஆகையால் நீ இங்குள்ள வேலைக்காரப்பெண்க ளில் யாரிடமாவது சொல்லி ஒரு உடைமட்டும் எனக்கு வாங்கிக் கொடுத்தால் நான் தட்சணம் இதைவிட்டுப் புறப்பட்டு விடுவேன்" என்றாள்.

மூதாட்டி:—அப்படியானால் நான் முன்னே கேட்டபோது உனக்கு அச்சர்தாரிடமே திரும்பிச்செல்ல பிரியமா யிருப்பதாய்க் கூறினையல்லவா?

கன்:—ஆம் ஆம். அவர் என்னைக்காப்பாற்றியவர். மிக்க கருணையும் ஜீவகாருண்யமுமுடையவர். நான் மறுபடி யவரிடம் செல்லாவிட்டால் நான் நன்றிகெட்டவளாய் விடுவேன்.

மூதா:—அடடா நீ நினைப்பது தவறு. நீ ஸர்தாரிடம் செல் வதில் ஒரு பயனுமில்லை. இப்பிரபு உன்மேல் அளவு கடந்த பிரியம் வைத்திருக்கிறார். நீமட்டும் அவர் பிரி யப்படி நடந்துகொண்டால், இதோபார் இந்த அலங் காரமான அறைகளையும் இங்கிருக்கும் செல்வப்பெருக் கையும் இவை யாவும் உன் சொந்தமேயாய்விடும். உன் னிடம் வேலைக்காரர்களும் தோழிகளும் தொண்டு செய்வார்கள். எப்படிப்பட்ட சீமாட்டிகளும் உனக்கு மரியாதை செய்வார்கள். நீ எவ்வளவோ கௌரவ மடைவாய்.

இம்மொழிகளைக் கேட்ட கன்னிகை மிக்க வியப்பும் திகிலும் கலவரமுமடைந்து, மனம் மிக்க புண்ணாகி, ஆத்திரத்தோடு,

"ஆ! இதென்ன பேச்சு? நீ கூறியதன் அர்த்தமென்ன? மெய்யாலும் இது ஒரு பிரபுவின் வீடா? ஒரு பிரபுவா தன்னிடம் அடைக்கலம் புகுந்த கன்னிகையிருக்கும் அறைக்குள் ஆசாரயீனமாய்ப் பிரவேசிப்பார்? ஒரு பிரபுவின் வீட்டுக்காரியஸ்திகூட எங்கேனும் இத்தகைய அகௌரவமான மொழிகளைக் கூறுவாளா?" என்றாள்.

இம்மொழிகளைக்கேட்ட மூதாட்டி "ஓகோ நீ பெரிய ஜாலக்காரி. நீ ஸர்தாரின் வைப்பாட்டியாயிருக்க விரும்புகிறாய். அந்த ஆளிடம் இருப்பதைவிட இப்பிரபுவிடமிருப்பது மிக்க சிலாக்கியம்..." என்று மிக்க அயோக்கியமான விஷயங்களைக் கூறினாள்.

இதைக்கேட்ட அமிர்தாம்பாள் சொல்லொணு அசிங்கமும் வியாகூலமுமடைந்து "அய்யோ தெய்வமே! இத்தகைய சதிக்காரரிடம் என்னைச் சிக்கவைத்தீரே. இதைவிட என் ஆவியை யுடனே வாங்கிக்கொண்டால் நலமாகுமே" என்று அலறியதும் மூர்ச்சையாய்ப் படுக்கையிற் சாய்ந்துவிட்டாள்.

நேயர்களே! சுபாவமாகவே கற்புடைய உத்தமி மேற்கண்ட சம்பாஷணையைச் செவியேற்றதே அவள் மனம் எத்தகைய மனோவேதனை யடைந்திருக்கும் என்பதை நீங்களே கருதலாகும்.

சற்றுநேரங்கழித்து அவளுக்குச் சுரணைவந்தபோது கண்களைத் திறந்துபார்த்தாள். அந்த அறையில் தான்மட்டும் தனியாயிருப்பதைக் கண்டு திகிலடைந்தாள். காரியஸ்தி

யங்கில்லை. அமிர்தாம்பாள் தன் நிலைமையைக் கருதி மிக்க வியாகூலப்பட்டுக்கொண் டிருக்கையில், பக்கத்திலிருந்து ஏதோ ஒரு அறை திறக்கப்படும் சத்தத்தைக் கேட்டாள்.

இரண்டொரு நிமிடங்களில் அவள் இருக்கும் அறை முரட்டுத்தனமாய்த் திறக்கப்பட்டதும், சுகசிங்கம்பிரபு அறைக்குள் வந்தார்.

அமிர்தாம்பாள் அவரைக்கண்டதும் கோவென்றலறிக் கூவினாள். நேயர்களே இவர்கள் இருவர்க்கும் நடந்த சம்பாஷணையை விவரமாய்க்கூற நமக்குப் பிரியமில்லை. ஆகையால் நடந்த விஷயத்தைச் சுருக்கமாய்க் கூறுகிறோம். சகசிங்கம் பிரபு கற்புடைய கன்னிகைகளை மயக்கி ஏமாற்றி வசியம் செய்து அவர்கள் கற்பை யழித்துப் பின்னால் அவர்களை நடுவீதியில் அனாதைகளாய் அலைய விட்டு விடுவதில் மிக்க சாமார்த்தியவான். "அந்தோ! இப்பெரும்பாதகத்திற்குக் கடவுள் நம்மை மிக்க கடுமையாய்த் தண்டிப்பாரே யென்று சற்றும் நினையாத பெருமூடன்.

அவன் மிக்க தந்திரமாய் நமது உத்தமக்கன்னிகையாகிய அமிர்தாம்பாளை மயக்க எவ்வளவோ கூறிப்பார்த்தான். அக்கன்னிகை அவன் ஜாலங்களால் மயங்கி விடவில்லை. அவள் முதலில் மிக்க திகிலும், குழப்பமு மடைந்தாளெனினும் சற்று நேரத்திற்குள் மனோதைரிய மடைந்து அப்பிரபுவை நோக்கி,

"ஓ பிரபுவே! பிரபு வமிசத்தில் பிறந்த உம்மிடத்தில் இத்தகைய நடக்கை யிருப்பது எனக்குப் பெரிய வியப்பாக விருக்கிறது. அந்தோ! தங்களிடம் அடைக்கலம் புகுந்த அனாதையாகிய ஒரு கன்னிகைக்கு இத்தகைய அகௌரவமான அழிவைச் செய்ய உமது மனம் உடன்

பட்டது உமது வமிசத்திற்கே மிக்க இழிவான பெயரை யுண்டாக்கு மென்பதை நீர் சற்றும் சிந்திக்காமற் போனது பெண்பிள்ளையாகிய எனக்கே மிக்க அவமானமாய்த் தோன்றுகிறது. ஓ! பிரபுவே! நீர் சகோதரிகளோடு பிறக்க வில்லையோ? உமக்குப் புத்திரிகளில்லையோ? அதெல்லாம் இல்லாவிட்டாலும் உமது தாயாரும், உமது மனைவியும் என்போன்ற பெண்பிள்ளைக ளல்லவோ. உமக்கு ஜீவகாருண்யம் என்பது கிடையாதோ? நான் உம்மை என் தந்தைபோல் பாவித்து உமக்குச் சாஷ்டாங்கமாய் நமஸ்காரம் செய்கிறேன்; நான் உமக்கு ஒரு தொந்திரவும் கொடுக்கவில்லை. என்னை யிந்த விடத்தை விட்டு வெளி தாண்டும்படி அனுமதி யளித்து விட்டால் அது ஒன்றே போதும். ஆண்டவன் உமக்கு நல்லருள் புரிவார்'' என்று கண்களில் நீரை வடித்துக்கொண்டே கூறினள். அமிர்தாம்பாளின் மேற்கண்ட மொழிகளைக்கேட்ட பிரபுவின் மனதில் உண்டான வெறுப்பும் கோபமும் சொல்ல முடியாது. அவர் முகத்தில் சற்றேனும் இரக்கமென்பதே தோன்றவில்லை. ஆயினும் அவர் தன் மனதிலுள்ளவற்றை யெல்லாம் அடக்கிக்கொண்டு அக் கன்னிகையிடம் மிக்க தந்திரமாய் அவள் மனதைக் கரைத்து, அவளுக்கு ஆசையை யூட்டி மயக்கிவிடக் கூடிய மாதிரியாய்ச் சம்பாஷிக்கத் தொடங்கினர்.

அந்தோ! கற்புடைய மங்கையர்க்கு இத்தகைய மொழிகள் புண்ணில் பழுக்கக் காய்ச்சிய வேலைச்சொருகியது போலன்றோ விருக்கும். அதனல் அக்கன்னிகை மனந்தாளாமல் பதை பதைத்துக் கடினமொழிகளைக் கூறத் தொடங்கினள். ஏனெனில் இப்பிரபு உண்மையிலேயே மிக்க துர்நடக்கைகளை யுடையவனென்றும், இரக்க

மென்பது சற்று மின்றி நிரபாதிகளாகிய பேதைப் பெண்களின் கற்பையழிக்கும் கல்நெஞ்சனுகிய கொடும்பாதகனென்றும், இவனிடம் இருக்கும் வீட்டுக்காரியஸ்தி முதலிய ஆட்களும் இவன் செய்கைகளுக்கு உடந்தையாகவேயிருக்கும் பணியாளரென்றும் அறிந்து கொண்டாள். "அந்தோ! நாம் ஒரு பெரிய ஆபத்திற் சிக்கி, அப்புண்ணியவானுகிய ஸர்தாரின் கருணையாலும், உதாரகுணத்தாலும் தப்பித்துக்கொண்டும் இப்போது மறுபடி இத்தகைய பெரிய ஆபத்தில் சிக்கிக் கொண்டோமே; இங்கு நமக்கு உதவி செய்வோர் ஒருவரையுங் கண்டிலமே; இந்த இராக்ஷதன் போன்ற மாயாவியின் விலங்கிலிருந்து நம்மைக் காப்பாற்றுவோர் ஒருவரு மில்லையே" என்று பேரிடி விழுந்த நாகம்போல் துடி துடித்தாள்.

பிரபுவோ "இவள் சாந்த வார்த்தைகளால் வசியம் செய்யப்படக் கூடியவ ளல்ல" என்று எண்ணிப் பலாத்காரம் செய்யத் தொடங்கினர். அதைப்பற்றி விவரமாய் எழுத நமக்குப் பிரியமில்லை. ஆகையால் நமது கதையின் தொடர்ச்சிக்கு எவ்வளவு அவசியமோ அவ்வளவே கூறுகிறோம்.

இதுகாறும் அயோக்கியமான வார்த்தை யொன்றையேனும் கேட்டிராத அக்கன்னிகை சொல்லொணு திகிலடைந்து விட்டாள். இத்தகைய ஆபத்தில் நமக்கு யாரும் உதவி செய்வோரில்லையே என்ற பெரும்பயத்தால், அவள் மனம் அளவுமீறி கலவரமடைந்து விட்டதால், சபலமடைந்தது. அச்சமயம் பிரபு உயிரினும் கற்பை யதிகமாய் மதிக்கும் உத்தமிகள் பலர் இருக்கிறார்கள் என்பதை யறியாத மூடத்தனத்தால் அவளைப் பலாத்காரமாய் ஆலிங்கனம் செய்துகொள்ளக்கருதி அவள் அருகிற் சென்றார்.

காதற் பித்தங்கொண்ட கன்மனத் துஷ்டனுகிய அம்மனிதன் முகத்தில் உண்டாயிருந்த விகாரத்தைக் கண்ட அக்கன்னிகை கோவென்றலறிச் சவம்போல் தரையில் மூர்ச்சையாய் விழுந்து விட்டாள். இவ்வாறு மாதர் மூர்ச்சை யடைவதையும் பிறகு சமாளித்து எழுந்திருப்பதையும், அதன் பின்னர் தன் பிரியத்திற்கு இணங்கி விடுவதையும் பிரத்யட்ச அநுபவமாய்க் கண்டிருக்கிறவ ராதலால் அவர் இதற்குச் சற்றும் பயப்படவில்லை, அதனுல் அவர் உடனே அவள் முகத்தில் ஜலம் தெளித்தல் முதலிய அவசியமான உபசாரங்க ளனைத்தும் செய்யத் தொடங்கினுர்.

பிரபு என்ன செய்தும் ஒரு பயனுமில்லை. அமிர்தாம்பாளின் முகம் சவம்போல் வெளுத்து விட்டது. அவள் மூக்கில் கைவைத்துப் பார்த்தார்; சுவாசம் அடியோடு நின்று விட்டது. நாடிகளைப்பார்த்தார் சற்றும் அசையவேயில்லை. அவர்பாடு இடிவிழுந்து விட்டது. என்ன செய்தும் அவள் அசையவே யில்லை. இவள் இறந்தேபோய் விடாவிட்டாலும் மிக்க ஆபத்தான மூர்ச்சையில் விழுந்து விட்டாள் என்று அவர் மனதிற் பட்டு விட்டது.

உடனே கூச்சலிட்டு வேலைக்காரனை யழைத்து வீட்டுக் காரியஸ்தியைக் கூப்பிடும்படி கட்டளை யிட்டார். அம்மாது அறைக்குள் வந்து அக்கன்னிகை யிருக்கும் நிலைமையைக் கண்டதும் திகிலடைந்து அவள் கரங்களைப் பார்த்ததும் அவள் விரல்களிலுள்ள நகங்களனைத்தும் வெளுத்து விட்டிருந்தன. அவள் நிலைமையைக் கண்டு காரியஸ்தி அழுது பிரலாபிப்பதைக் கண்ட பிரபு தன் சந்தேகப்படி அக்கன்னிகை மடிந்து விட்டா ளென்றே தீர்மானித்துக்

கொண்டு சொல்லொணுத் திகிலடைந்து உடனே தெய்வ யானையை யழைத்து வரும்படி கூறினர்.

இரண்டொரு நிமிடங்களில் தெய்வயானை அறைக்குள் வந்தாள். அவள் அமிர்தாம்பாளின் நிலையை நன்ருய் உற்றுப் பார்த்துவிட்டு "சரி இதைப்பற்றி என்ன பிரயத்தனம் செய்தாலும் பயன்படாது. போன உயிரை யெந்த வைத்தியனுலும் மறுபடி வரவழைக்க முடியாது" என்று தீர்மானமாய்க் கூறி விட்டாள்.

இதைக் கேட்டதே பிரபுவிற்கு பித்தம் பிடித்த மாதிரி யாய் விட்டது. "அய்யோ கடவுளே! நான் என்ன செய்வேன்? இந்த ஆபத்தால் பெரிய தீங்கு விளையுமே" என்று பிரலாபித்தார். இவற்றைக் கேட்ட வீட்டுக்காரியஸ்தி பின்னும் திகிலடைந்து "அய்யோ! நாம் என்ன செய்வது? எல்லாரையும் தூக்கிற் போட்டுவிடுவார்களே! அய்யோ தெய்வமே!" என்று அலறினள்.

தெய்வயானை தன் பயத்தையெல்லாம் ஒரு பக்கம் விலக்கி விட்டு, சற்று மனேதிட மடைந்து "இதைப்பற்றி இப்போது திகிலும் கலவரமும் அடைவதில் ஒரு பயனுமே யில்லை. அதனுல் நமது ஆபத்து அதிகமாகுமே யன்றி வேறில்லை. மிக்க ஆழ்ந்த யோசனையாலும், தைரியத்தாலுமே இப்போது இந்த ஆபத்திலிருந்து தப்பலாகும். ஏன் ஒருவரும் அவளைக் கொலைசெய்யவில்லை. அப்படி யிருக்க நடந்த சங்கதியை யொப்புக்கொண்டாலென்ன?" என்ருள்.

இம்மொழிகளைக் கேட்டதே பிரபு "அய்யோ! இது பெரிய இக்கட்டா யிருக்கிறதே. இறந்து போனதைப்பற்றி சவத்தைச் சோதனை செய்வார்களே. எல்லா சங்கதியும் அப்போது வெளிவர வேண்டுமே. இப்பெண் யார்? இங்கு எப்

படி அவள் வந்தாள்? முதலிய எல்லா கேள்விகளும் உண்டாகுமே. அய்யோ கடவுளே! நான் என்ன செய்வேன். அதிலும் அவள் இரவு ஸர்தார் சூரியநாயகரின் மாளிகை தீப்பற்றியபோது அங்கிருந்தவள் என்று தெரிந்துவிட்டால், அவள் பிறரால் காப்பாற்றப்படினும் அம் மாளிகைக்கு அருகிலுள்ள விடத்தில் கொண்டுபோகப்படாமல் இவ்வளவு தூரத்திலுள்ள விடத்திற்கு ஏன் கொண்டுவரப்பட்டாள்? இப்படித் திடீலென்று மாணமடையவேண்டிய காரண மென்ன? என்று எல்லாக் கேள்விகளு முண்டாகுமே" என்று பிரலாபித்துக்கொண்டு தன் விரல்களை நெறித்துக் கொண்டு பித்தம்பிடித்தவன்போல் அறையில் முன்னும் பின்னும் திரியலானர்.

தெய்வயானை சற்றுநேரம் சிந்தித்து தைரியத்தோடு பிரபுவை நோக்கி, "இனி யோசிப்பதில் பயனில்லை. செய்தால் ஒருவழிதான் இருக்கிறது. அதாவது, ஸர்தார் சூரிய நாயகரை யழைத்து நடந்த சங்கதியை யுண்மையாய்க் கூறி அவர் பாதங்களில் அடைக்கலம் புகுந்தாலென்ன? அதுவே சரியான யோசனை" என்முள்.

பலவிதமான யோசனைகளைச் செய்தபின் கடைசியில் பிரபு தெய்வயானையை நோக்கி, "ஆம், ஆம்; உன் யோசனையே சரி. வேறே வழியில்லை" என்று உடனே தன் அந்தரங்க ஆட்காரனை யழைத்து இரகசியமாய் அவனிடம் சில சங்கதிகளைக்கூறி ஸர்தாரிடம் அனுப்பினர்.

வேலைக்காரன் ஸர்தாரிடம்கூறியசங்கதியாவது "ஏதோ மிக்க முக்கியமான அவசர விஷயமாய் சுகசிங்கம் பிரபு தங்களை அழைத்துவரச் சொன்னர்" என்முன். ஸர்தார் முதலில் மிக்க கலவரமடைந்தார். ஏனெனில் கோமளவல்லியை முன்பு அப்பிரபுவின் விலங்கிலிருந்து மீட்டு விட்ட

தற்காக ஏதாவது சதியாலோசனை செய்கிறார்களோ வென்னமோவென்று கருதினர். பிறகு சிந்தித்து ஏதோ ஆபத்தான விஷயமே நடந்திருக்கும் என்று எண்ணி அவ்வேலைக்காரன் கூடவே பிரபுவின் மாளிகைக்கு வந்தார்.

அவர் பிரபுவைக் கண்டதும் பிரபு ஏதோ பெரிய துயரத்தில் ஆழ்ந்திருக்கிறார் என்று அறிந்து "நண்பரே! என்ன சமாசாரம். ஏன் இவ்வளவு வியாகூலம்?" என்றார்.

பிரபு:—நண்பரே! முதலாவது முன்னே நடந்த கோமளவல்லியின் விஷயத்தைப்பற்றித் தங்களுக்கு என்மேல் ஏதேனும் மனவருத்தம் இருக்கிறதா? அதை முன்பு கூறும்.

ஸர்:—அதைப்பற்றி எனக்குச் சற்றும் மனஸ்தாபமில்லையென்று பின்னால் நடந்த விவகாரங்களால் உமக்குத் தெரியுமே இப்போது உமக்கு என்ன இடுக்கண் நேர்ந்தது? அது விஷயத்தில் நான் செய்யக்கூடிய உதவி ஏதாவதிருந்தால் கூறும். இச்சமயத்தில் நானே மிக்க மனத்துயரிலிருக்கிறேன் என் மாளிகை அதிசயமாய்த் தீப்பற்றிகொண்டதென்று அதுகூட எனக்கு அவ்வளவு வருத்தத்தை யுண்டாக்காது. மிக்க ஆபத்திலிருந்த ஒரு அழகிய கன்னிகையை நான் காப்பாற்றி என் மாளிகைக்குக் கொண்டுவந்து சுகப்படுத்திக்கொண் டிருந்தேன். அந்தரங்கத்தில் நான் அக்கன்னிகை விஷயத்தில் மிக்க பிரியமும் கவலையும் கொண்டிருந்தேன். அக்கன்னிகையைக் கடந்த இரவு நான் என் உயிரை இலட்சியம் செய்யாமல் காப்பாற்றினேன். அக்கன்னிகை அடியோடு காணாமற் போய்

விட்டது எனக்குப் பிராணவேதனையா யிருக்கிறது'' என்றார்.

இம்மொழிகளைக் கேட்ட பிரபு மிக்க திகிலடைந்து "அந்தோ நண்பரே! இப்போது எனக்குப் பின்னும் பெருந் திகிலாய் விட்டது. என் கௌரவமே, அது மட்டுமல்ல, என் பிராணனே பெரிய ஆபத்தில் சிக்கிக்கொண் டிருக்கிறது. ஒன்றுமட்டும் கூறும். அதாவது என்னை யாபத்தில் காட் டிக் கொடுத்துவிடமாட்டீரே?'' என்றார்.

ஸர்தார் மிக்க திகிலும் கலவரமுமடைந்து, "அந்தோ! நீர் கூறுவதென்ன? என்ன சங்கதி? உடனே கூறும். என் மனதைப் பெரிய திகிலிலும் சந்தேகத்திலும் வைக்கவேண் டாம்'' என்று மிக்க ஆவலோடு கேட்டார்.

பிரபு:—"அப்படியாயின் தெரிந்து கொள்ளும். தாங்கள் கூறிய அக்கன்னிகை...'' என்றதே.

ஸர்:—அய்யோ கடவுளே! அவள் உம்மிடமா சிக்கிக்கொண் டாள்.

பிரபு:—ஆம். ஆனால்......

இம்மொழிகளைக் கேட்டதே ஸர்தார் இப்பிரபு அவ ளுக்கு ஏதோ தீங்கிழைத்துவிட்டார் என்று மிக்க கோபமும் துயரமு மடைந்து பிரபுவை நோக்கி மிக்க ஆத்திரத்தோடு,

"ஓகோ! அவள் எங்கே யிருக்கிறாள், எங்கே யிருக் கிறாள்?'' என்று கூறிக்கொண்டே மிக்க ஆத்திரத்தோடு எழுந்து அப்பிரபுவின் கழுத்துப்பட்டையைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டு,

"ஆ! நீமட்டும் அவளுக்கும் ஏதேனும் தீங்கு செய் திருந்தாயோ ஆ! என்ன நடக்குமோ என்னால் கூற......'' என்றதே,

பிரபு மிக்க திகிலும் கலவரமு மடைந்து,

"அய்யோ! ஸர்தார், நான் என்னவென்று கூறுவேன், எப்படிக் கூறுவேன்" என்றூர்.

ஸர்தார் இம்மொழிகளைக் கேட்டதும் ஓகோ இவன் பெரிய குற்றம் செய்திருக்கிறுன் என்று எண்ணிக்கொண்டு மிக்க ஆத்திரமடைந்து,

"அடே கள்ளப்பயலே! நீ அவளைத் துராக்கிருதமாய்க் கற்பழித்துவிட்டிருக்கிறுய். ஓ சண்டாளனே! பரமத்துரோகியே! இதைவிட அவள் இறந்துபோய் விட்டாள் என்று கூறி யிருப்பாயேல் நான் இவ்வளவு துயரடையமாட்டேனே" என்று பிரலாபித்தார்.

பிரபு:—அவள் மரணமே! அவள் மரணமே! ஆம் அவள் மரணத்தைப் பற்றியே நான் கூறவேண்டியதா யிருக்கிறது. ஆனுல் கடவுளறிய அவள் நானறிந்த வரையில் கற்பழியா உத்தமியே என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை.

இதைக்கேட்ட ஸர்தார் கால்மணிநேரம் ஒன்றும் பேசவில்லை. அவர் மனதில் உண்டான துயரத்திற்கும், கலவரத்திற்கும் அளவில்லை. அதை இன்னவிதமென்று விவரித்துக் கூற ஒருவராலும் முடியாது. கடைசியில் அவர் மனதை யொருவாறு தைரியப்படுத்திக்கொண்டு பிரபுவை நோக்கித் திடீலென்று,

"ஆனுல் அவள் இறந்துவிட்டாளென்று கூறுகிறீர்?" என்றூர்.

பிரபு:—ஆம், ஆம்; உண்மையாகவே கூறுகிறேன்.

ஸர்:—அப்படியாயின் நடந்த விபரமென்ன? கொஞ்சமும் ஒளிக்காமல் உள்ளதைக் கூறும்.

பிரபு அதன்மேல் அக்கன்னிகை தன்னிடம் கொண்டு வரப்பட்டதையும், யார் கொண்டுவந்தார்கள் என்பதையும், அவர்கள் கூறிய சங்கதிகளையும் யாவும், அதன்மேல் அவள் ஸர்தாரின் வைப்பாட்டி என்று தான் எண்ணிக்கொண்டதையும் பிறகு நடந்த சங்கதிகளையும் யாவும் உள்ளபடி கூறினர்.

ஸர்தார் "அய்யோ கடவுளே!" என்று தலைமேல் கையை வைத்துக்கொண்டு சற்றுநேரம் தலைகுனிந்தபடி வியாகூலத்திலிருந்தார்.

பிரபு:—அந்தோ நான் யாவும் உள்ளபடி கூறிவிட்டேன். இனி உமது கருணையே எனக்கு அடைக்கலம். என்னால் கூடிய யாவும் நான் செய்தேன்........

ஸர்தார் "போதும், போதும்; நிறுத்தும். இங்கு அவளைக் கொண்டுவந்தவர்கள் அந்தக் கள்ளர்களென்று தெரிந்துகொண்டேன். இப்போது அவள் சவத்தை எனக்குக் காட்டும்" என்றார்.

ஸர்தார் கூறிய அதிகார தோரணையான மொழிகளால் பிரபு ஒன்றும் பதில்கூற முடியாதவராய்ப் பேசாமலெழுந்து அமிர்தாம்பாளின் அறையை நோக்கி நடந்தார். ஸர்தார் மௌனமாய்ப் பின் சென்றார். பிரபு அந்த அறையின் கதவைத் திறந்ததும் ஸர்தார் முன்னே உள்நுழைந்து நீர் செல்லலாம் என்று பிரபுவுக்குச் சமிக்கை செய்துவிட்டுக் கதவைமூடித் தாளிட்டுக்கொண்டார். பிரபு வாய்பேசாமல் வெளியில் நின்றார்.

உள்ளே சென்ற ஸர்தார் அக்கன்னிகையின் உருவத்தைக் கண்டு அடைந்த துயரத்தையும் அவர் வெளிப்படையாய் வாய்விட்டுப் பிரலாபித்ததையும் நாம் விவரித்துக் கூறுவதெனின் மிக்க இடங்கொள்ளும். அவள்தேகம்

அசைவின்றிக் கிடக்கும் நிலைமையையும், அவள் கண்மூடிக் கொண்டிருப்பதையும், சுவாசம் இல்லாமலிருப்பதையும் அங்கங்கள் நீட்டியது நீட்டியபடி யிருப்பதையும் கண்டதே பலதரம் கடவுளே இவள் மூர்ச்சையி லிருக்கிறாளோ, உயிர் உள்ளே யடங்கி யிருக்கிறதோ, பின்னால் பெற்றெழுந்திருப் பாளோ யென்று ஆவலுடன் பலதரம் பார்த்துப் பார்த்துக் கடைசியில் இவள் மெய்யாகவே யிறந்து விட்டாள் என்று தீர்மானித்துக் கொண்டு, மறுபடி தன் துயரத்தை யடக்க முடியாமல் சற்றுநேரம் பிரலாபித்துப் பின்பு அறையை விட்டு வெளிப் பட்டார்.

அவர் அறைக்கு வெளியில் காத்துக் கொண்டிருக்கும் பிரபுவைக் கண்டதே,

"பிரபுவே! இவளுடைய வாலிப சகோதரன் ஒருவன் இருக்கிறான். இச்சமயம் அவன் இந்த நாட்டிலில்லை. ஆனால் அவனுக்கு இவளைப்பற்றிய எல்லா சமாசாரங்களும் தெரியும். இவள் கௌரவமும் யோக்கியதையு முடைய பெரிய மனிதராகிய நண்பனிடம் அடைக்கலம் புகுந்திருக்கிறாள். அவனால் ஆதரிக்கப்பட்டு வருகிறாளென்று அறிந்திருக்கிறான். அவன் இவளுக்காக என்னைவந்து கேட்பான். நான் அவனுக்குப் பதில் கூறப் பாத்தியப்பட்டவனா யிருக்கிறேன். நான் அவனுக்கு என்ன சமாதானம் கூறுவதென்று எனக்குத் தெரியவில்லை" யென்றார்.

பிரபு:—அந்தோ! என்னைக் காட்டிக் கொடாமலிருக்க வழியில்லையா. வீட்டில் தீப்பற்றிக்கொண்ட கலவரத்தைக் கூறி அங்கு உண்டான திகிலாலும் பீதியாலும் இறந்து விட்டாள் என்று கூறும். எப்படியாவது என்மானத்தைக் காப்பாற்ற வேண்டும். கடவுளே! நான் என்ன செய்வேன் என்று பிரலாபிக்கத் தொடங்கினார்.

ஸர்தார்:—ஆம் ஆம். அப்படி ஏதாவது கூறித்தான் இதை மறைக்க வேண்டும். அதைப்பற்றி யின்னும் அதிக மாய்ப் பேசவேண்டிய அவசிய மில்லை. சவத்தை யடக்கம் செய்ய ஏற்பாடு செய்யும்.

பிரபு:—இக்கன்னிகையின் பெயர் என்னவென்று பிரஸ்தா பிப்பது?

ஸர்தார்:—இவர்களே மடிந்து போனபின் இனிப் பெயரை மறைக்க வேண்டிய அவசியமில்லை. இவள் பெயர் அமிர்தாம்பாள். சகோதரன் பெயர் விஸ்வநாதன்.

பிரபு:—ஆ! தெரியும் தெரியும். பத்திரிகைகளில் பார்த்தேன். அவன் இப்போது எங்கோ ஒளிந்துகொண் டிருக்கிறு னல்லவா?

ஸர்தார்:—"ஆம், ஆம். ஆ! நான் அவனை மீட்டிவிடச் செய் யும் முயற்சியில் மட்டும் ஜெயமடையும்படி ஆண்டவன் அருள்புரிந்தால்....கிடக்கட்டும் பிரபுவே! நான் அவ் வாலிபன் விஷயத்தில் மிக்க கவலைகொண்டிருக்கி றேன் என்கிற மட்டில் நீர் கருத்தில் வைத்தால் போதும். ஆ! ஏதாவது ஒரு அபூர்வ தெய்வசக்தி மட் டும் வெளிப்பட்டு இக்கன்னிகையை உயிர்ப்பித்து விட் டால்...." என்று கூறிக்கொண்டே வெளியிற் சென் றார்.

---

76 - வது அத்தியாயம்

நேயர்களே! இச்சம்பவங்கள் நடக்கும்போது யாவ ராலும் இறந்து போனவளாய்க் கருதப்பட்ட அமிர்தாம்பாளின் நிலைமை உண்மையில் எப்படி யிருக்கிற தென்று கவனிப்போம்.

அவளுக்குத் திடீலென்று ஸ்மரணை கொஞ்சம் வந்தது. முதலில் தான் என்ற ஒன்றுமட்டு மிருப்பதாய்த் தோன்றி யதே யன்றி தனக்குத் தேகம் என்ற ஒன்று இருப்பதாய்க் கூடத் தோன்றவில்லை. சற்று போகப்போக அறிவின் வின் பிரகாசம் மங்கலாய்ப் புலப்பட்டது. அதன்மேல் தான் ஒரு மஞ்சத்தில் படுத்திருப்பதுபோல் தெரிந் தது. ஆனால் தேகம் அடியோடு தன் வசத்திலில்லை யென்று புலப்பட்டது. ஏனெனில் தேகவுணர்ச்சி புலப்பட்டதே எவரும் கண்களைத் திறக்க முயல்வது சுபாவம். அவளு க்குக் கண்களிருப்பது தெரிகிறதே யொழிய திறக்க முயன் றால் அடியோடு முடியவில்லை. தன் நரம்புகளில் ஒன்றே னும் அசைக்கக் கூடியதா யில்லை. ஆனால் கண்கள் மூடிக் கொண்டிருந்தாலும் வெளியில் இருள் சூழ்ந்திருக்கவில்லை யென்றும் பிரகாசம் இருக்கிறதென்றும் மட்டும் உணர்ச்சி யுண்டாயிற்று. பிறகு சற்றுநேரம் அதாவது இரண்டு மூன்று நிமிடங்கள் வரையில் ஒன்றும் தெரியவேயில்லை. பிறகு முன்னினைவும் தான் ஒரு மஞ்சத்தின் மேலிருப்பது போலும் தோன்றியது. தனக்குச் சகல அவயவங்களு மிருப்பது தெரிகிறது. ஆனால் ஒன்றேனும் தன் சுயா தீனத்தி லிருப்பதாய்த் தெரியவில்லை. முதலாவது கண்களே

திறக்க முடியவில்லை. ஆனால் அப்போதும் வெளிச்சம் இருப்பதாய் மட்டும் தெரிகிறது. அறிவிற்குள் ஓர் அறிவு சிறு விளக்குபோல் பிரகாசித்துக்கொண் டிருந்தது. நேயர்களே! இது ஒரு அபூர்வமான நிலைமையென்றே கருத வேண்டும். ஆன்மா பலவித நிலைகளில் நின்று பிரகாசிப்பதுண்டு. இப்போது அக்கன்னிகைக்கு எதிர்கால இறந்த கால உணர்ச்சி சற்றுமேயில்லை. நிகழ்கால உணர்ச்சியும் மிக்க குறைவான சாக்கிரத்தில் இருக்கிறது.

திடீலென்று ஏதோ சத்தம் அவள் செவிப்புலனுக்குப் புலப்பட்டது. முதலில் அது இன்னதென்று புலப்படவில்லை. சற்றுநேரம் கழித்து முதலில் அது யாவராலோ கூறப்பட்ட வார்த்தைகளென்றும், பிறகு இன்ன பாஷையென்றும் அதன்பின்னர் அது தனக்குத்தெரிந்த பாஷையென்றும் உணர்ச்சி யுண்டாயிற்று. ஆனால் வார்த்தைகள் தெளிவாய் விளங்கவில்லை. அப்போது தான் அவளுக்குத் தன்னைவிட அன்னிய மனிதரின் நினைப்பு வந்தது.

சற்று நேரத்திற்குள் பேசுபவரின் குரல் தான் எப்போதோ கேட்டதுபோல் தோன்றியது. உடனே ஸர்தார் சூரிய நாயகத்தின் உணவு உதித்தது. அச்சமயம் அவள் தேகத்திலுள்ள நரம்புகளிலெல்லாம் ஒருவித உணர்ச்சி யுண்டாயிற்று. தன் அருகில் யாரோ நிற்பதுபோல் தோன்றியது. கட்புலனுக்கு விளங்காவிடினும்,கண்களைத் திறக்கக் கூடாவிடினும் உள் அறிவிற்கு யாவும் புலப்படுவதுபோல் இருந்தது. ஸர்தார் தன் அருகில் நின்று குனிந்து தன் முகத்தை உற்று நோக்குவதுபோல் தோன்றியது.

அச்சமயம் அவள் காத்தை யாரோ பற்றுவதுபோல் இருந்தது. ஸர்தாரே யவ்வாறு பற்றுகிறுரென்று அவள்

மனதில் ஒரு உணர்ச்சி யுண்டாயிற்று. ஓ கடவுளே அச் சமயம் அவள் மனதில் உண்டான உணர்ச்சி இத்தகைய தெனக் கூறமுடியாது. சற்று நேரத்திற்குள் அக்கரம் தன் காத்தைவிட்டு நீங்கிவிட்டது. அப்போது அவர் கூறிய வார்த்தைகளில் சில அவளுக்கு நன்ருய் விளங்கின. அத ஞல் அவருக்குத் தன்மேல் கௌரவமான காதல் இருக்கி றது என்று உணர்ந்ததும் அவள் நரம்புகளுக்குப் பின்னும் அதிக உணர்ச்சி யுண்டாயிற்று. அதனுல் அறிவின் பிரகாச மும் அதிகப்பட்டது.

மறு நிமிடம் கதவு மூடப்படுவது அவள் செவிகளில் கேட்டது. உடனே திடீரென்று ஒரு புது உணர்ச்சியும் திகிலும் உண்டாயிற்று. தன் நிலையைப்பற்றி சிந்தனை யுண் டாயிற்று. தேகமோ சவத்தின் நிலைமையிலிருக்கிறது என்று அவள் மனதிற்பட்டதே "அந்தோ நாம் இறக்கும் தருவாயி லிருக்கிறேமோ! ஆ கடவுளே, இவர்கள் நாம் இறந்துபோன தாய்க் கருதுகிறுர்களோ" வென்று நினைத்தாள். உடனே சற்று முன்பு ஸர்தார் தன் அருகில் நின்று, "அந்தோ பிரகாசம் பொருந்திய இவ் வதனத்தை யித்தகைய ஸ்திதியில் என் கண்ணுைப் பார்ப்பேனென்றும் நான் கனவி லும் கருதவில்லையே. அய்யோ கடவுளே!" என்று கூறி யது அவள் நினைவிற்கு வந்தது.

உடனே "ஓகோ! நாம் சவமாய்க் கருதப்பட்டிருக்கி றேம். நம்மைச் சவமென்றே யெண்ணி அடைக்கலம் செய்து விடுவார்கள் போலும்" என்று ஏககாலத்தில் அவள் மனதில் பட்டதோடு தமயன் நினைப்பும் வந்தது. இந்த விபரீத உணர்ச்சியைச் சகிக்க முடியாது மறுபடியும் மூர்ச் சை யடைந்து விட்டாள்.

* * * * *

மறுபடி ஸ்மாரணை வந்தபோது முன் மூர்ச்சையடையும் போதிருந்த நினைப்பே முதலில் நினைவிற்கு வந்தது. "அந்தோ, நாம் உண்மையாகவே இறக்கும் தருவாயில் இருக்கிறோமோ—(அவர்கள் தேசாகார மதாசாரப்படி) அந்தோ நம்மைச் சவப்பெட்டியில் போட்டு அடைத்துப் பிறகு குழியில்வைத்துப் புதைத்துவிடுவார்களோ! கடவுளே! இந்த இளவயதில்—நாம் ஒரு தோஷமுமறியோமே. உலகில் ஒரு சுகத்தையு மறியவில்லையே. ஓகோ! பரிதாபம். நமது தமையன் வந்து நாம் இம்மாதிரி மரித்தோம் என்று கேள்விப்பட்டால் என்ன துயரமடைவானோ" என்று மனதிற் சிந்தித்தாள். அவள் மனோவேதனை சகிக்கத்தக்கதாயில்லை. "ஆ! நாம் நம்மால் கூடிய முயற்சிசெய்து தேகத்தை யசைத்துப் புரள்வோம். உதடுகளையாவது அசைப்போம்" என்று கருதி தன்னால் கூடியவரையில் பார்த்தாள்; சற்றேனும் முடியவில்லை.

ஆனால் அப்போது அவளுக்குத் தேகத்தைப்பற்றிய உணர்ச்சி யுண்டானதால் அதன் நிலைமை மனதிற்குப் புலப்பட்டது. அதாவது, முதலில் தன்தேகம் முன் இருந்த நிலைமையில் இருப்பதாய்த் தோன்றவில்லை. பூரணமாய் மல்லாத்திப் படுக்கவைக்கப்பட் டிருப்பதுபோல் தெரிந்தது. இரண்டாவது தன் கரங்கள் இரண்டும் தன் பக்கங்களோடு சேர்த்து அணைத்து வைக்கப்பட்டிருந்தன. அதோடு கால்களும் ஒன்றோடொன்று சேர்த்து நெருக்கமாய் நீட்டிவைக்கப்பட் டிருந்தது. இதுமட்டுமல்ல அய்யோ கடவுளே தன் தலைக்கும் தாடைக்கும் ஒரு துணி சுற்றப் பட்டிருக்கிறது. சற்றுநேரத்திற்குள் மற்ற விவரமும் தெரிந்தது. அதாவது தன் தேகத்தைச் சுற்றி ஒரு வஸ்திரம் சுற்றப்பட்டிருப்பது

போல் தெரிந்தது. அதோடு தன் நாசிக்குப் புதுச்சிலையின் வாசனை தோன்றியது.

"அய்யோ கடவுளே, நாம் செத்தவளாகவே தீர்மானிக்கப்பட்டு விட்டோம். நமது நிலைமை கற்சிலைக்குள் உயிர் புகுந்துகொண் டிருப்பதுபோல் இருக்கிறது" என்று பதை பதைத்தாள். அவள் மூளை தீப்பற்றி எரிவதுபோலிருந்தது.

அவள் இத்தகைய வேதனையிலிருக்கையில் அறையின் கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டது. இரண்டொரு நிமிஷங்களில் "சின்னப்பா வாவா! உள்ளேவா!" என்று வீட்டுக் காரியஸ்தியின் குரல்கேட்டது. அதன் பிறகு அடியிற்கண்ட சம்பாஷணை நடந்தது:—

சின்னப்பன்:—ஆ! இது மிக்க அழகான தோற்றமுடைய சவம். இத்தகைய முகவிலாசம்பொருந்திய சவத்தை நான் கண்டதே யில்லை.

காரியஸ்தி:—ஓ சின்னப்பா! இக்கோரத்தை யென்னென்று கூறுவேன், என் மனம் பதைக்கிறது. இவ்வழகிய கன்னிகை ஸர்தார் சூரியநாயகர் வீட்டில் இருந்தாள். அங்கு தீப்பற்றிக்கொண்டு பெரிய ஆபத்துண்டாய் விட்டது. தீ அதிக துரிதமாய்ப் பாவி விட்டதால் இக் கன்னிகை பாபம் அடியோடு தீயில் சிக்கிக்கொண்டு மடியும் சமயத்தி லிருந்தாள். நற்காலமாய் மிக்க பெரிய மனிதர் இருவர், ஒருவர் அரண்மனை வீரரின் காப்டன், மற்றொருவர் பெரிய குருவின் புத்திரர், அப் போர்வீரர் தன் நீண்ட அங்கியை யிவளுக்கு உடுத்தினர். ஸர்தாருக்கு நமது பிரபுதான் மனமொத்த நம்பகமான நண்பரானபடியால் இவளை யிங்கு அனுப்

பினல்தான் இவள் கௌரவமாய் காப்பாற்றப் படுவாள் என்று இங்கு அனுப்பினர். அந்தோ எங்கள் மனம் பட்ட வேதனை கடவுளே யறிவார்.

அவளுக்குண்டான திகில் அளவுகடந்து விட்டது. நாங்கள் மிக்க துயரமும் கலவரமு மடைந்து எங்களால் கூடிய உபசாரம் செய்துகொண்டே உடனே மிக்க பிரக்யாதி பெற்ற டாக்டர் ஒருவர்க்குத் துரிதமாய் ஆளனுப்பினேம். அந்தோ! நான் இவளை யென்மார்மேல் சாய்த்து வைத்துக்கொண் டிருக்கையில், டாக்டர் வருமுன்பே இவள் ஆவி பறந்து விட்டது. நித்திரை போகிறவள்போல் போய்விட்டாள் என்றாள்.

சின்னப்பன்:—"சரி சரி மிக்க அழகுடையவதனம்; ஆனல் புழுக்கள் சீக்கிரம் மென்று தின்றுவிடும்" என்றான்.

இவர்கள் சம்பாஷணை முழுதும் நமது அமிர்தாம்பாள் செவிகளில் விழுந்தது. அந்தோ "நாம் மரித்த சவமாகவே யாவராலும் கருதப்பட்டு விட்டோம் என்று உணர்ந்ததே அவள் மனதில் உண்டான வேதனை யித்தகையதென யாவராற் கூறமுடியும். தான் உயிரோடிருப்பதையவள் நன்றாய் உணர்கிறாள் உள்ளே அறிவின் உணர்ச்சியும் பிரகாசமும் இருக்கிறது. ஆனல் தேகத்தின் ஒரு அவயவமாவது தன் சுயாதீனத்திலில்லை. தான் உயிரோடிருப்பதாய்ப் பிறர்க்குத் தெரிவிக்கலா மென்று பார்த்தால் என்ன முயற்சி செய்தாலும் முடியவில்லை, முதலாவது கண்களைத் திறக்க முடியவில்லை. எவ்விதமான சத்தத்தையாவது உண்டாக்கலா மென்றால் சற்றும் முடியவில்லை.

இத்தகைய நிலைமையில் ஒருவர் இருந்தால் அவர்கள் மனவருத்தம் எதற்குத் தான் ஒப்பிடலாகும் என்பதை யிதை வாசிப்போரே யுணரலாகும்.

அவள் வேதனை யிதோடு முடிவதாயில்லை. ஏனெனில் உடனே பின்னால் நடந்த சம்பவங்கள் அவள் மனோவேதனை யென்னும் எரியும் அக்னியில் நெய்க்குடத்தை யூற்றிய மாதிரி யாயிற்று. எவ்வாறெனின், சற்றுநேரத்திற்குள் யாரோ தன் தேகத்தின் நீளத்தை அளவு கோலால் அளந்து பார்ப்பது அவளுக்குப் புலப்பட்டது. "ஓகோ! நமக்குச் சவப்பெட்டிசெய்ய அளவெடுக்கப் படுகிறது என்று உணர்ந்தாள்.

அந்த நாட்டில் ஒருவர் மரணமடைந்தால் சவத்தை யடக்கம் செய்ய அதற்கென்று தொழில்செய்யும் ஆட்களிடம் குத்தகையாய் ஏற்பாடு செய்துவிடுவார்கள். ஏழைகள் முன்னாடியே யிவ்வளவென்று முடிவுசெய்து கொள்வார்கள். செல்வந்தர் பேசாமல் அத்தொழிலில் மிக்க நாகரீகமாய்ச் செய்யும் அனுபவமுடையவர்களிடம் கட்டளையிட்டு விடுவார்கள். அத்தொழிலாளிகள் மிக்க உயர்ந்த சாமான்களால் சவப்பெட்டியைச் செய்வதுபோல் பாசாங்குசெய்து வஞ்சித்து நல்ல பணம் சம்பாதிப்பார்கள். இதுமட்டுமல்ல. சடங்குக்கு வந்தவர்கள் யாவர்க்கும் சுடலைக்குப் போகவும் திரும்பி வீட்டிற்குவரவும் வண்டிகள் அமர்த்துவதும், அவர்களில் சுற்றத்தார்களா யிருப்போர்க்கெல்லாம் துக்கக்குறி காட்டும் கறுப்புடை யாயத்தம் செய்துகொடுப்பதும் அக்குத்ததகைக்காரன் கடமையே. இவற்றால் அவன் மிக்க சாதாரணமான மரத்தால் சவப்பெட்டியைச் செய்து அதை அப்படம் தேக்குமரம் என்று தன் கிரையப்பட்டியில் (பில் Bill) காட்டி அதன்படி விலை போடுவான் இவ்வாறே மற்ற யாவற்றிற்கும் ஊகித்துக்கொள்ள வேண்டும்.

சின்னப்பன் தன்னை யளவெடுக்கும்போதே யிவன் இன்ன தொழிலாளியென்று அமிர்தாம்பாள் தெரிந்து கொண்டாள்.

நேயர்களே! "உயிரோடிருக்கும் நம்மை இறந்தவளாகவே தீர்மானித்து விட்டார்கள். நமக்கு சவப்பெட்டி செய்யவும் ஏற்பாடாய் விட்டது. உயிரோடு நம்மை அப்பெட்டியில் வைத்து அடைத்துவிடப் போகிறார்கள். பிறகு அப்படியே கொண்டுபோய் கல்லறையில் அடக்கம் செய்து விடப்போகிறார்கள். நாம் உயிரோடு மண்ணில் புதைக்கப் படப்போகிறோம்" என்று இவ்விதமான உணர்ச்சி அக்கன்னிகையின் மனதில் உண்டானபோது, அவளுக்குண்டான வேதனையை யித்தகையதென நாம் எவ்வாறு கூற முடியும்? யாரால்தான் கூடும்? அந்தோ, அது கடவுளுக்கே ஒப்படைக்கப் பட வேண்டும்.

அவள் மனம் இத்தகைய வேதனையி லிருக்கையில் அடியிற்கண்ட சம்பாஷணை யவள் செவிகளில் விழுந்தது.

சின்னப்பன் சற்று தாழ்ந்தகுரலாய் வீட்டுக்காரியஸ்தியை நோக்கி, "சரிதான் இது நல்ல மரியாதையும் நாகரீகமுமான விதமாகத்தானே நடத்தப்படும்?" என்றான்.

காரியஸ்தி:—தடையென்ன! பிரபு எல்லா விஷயங்களையும் என் வசத்தில் பூராய் விட்டுவிட்டார். சின்னப்பா! இதோ பார் நாம் இருவரும் இதில் சமபாகமாய் வைத்துக் கொண்டால் திருப்தியாய் எல்லா விஷயங்களையும் நடத்திக் கொள்ளலாம்.

சின்னப்பன்:—மிக்க நலம்; நீ மனம்விட்டு எதையும் கூறினால் நமக்குள் எல்லா விஷயங்களையும் திருப்தியாய் ஏற்பாடு செய்துகொள்ளலாம். ஆகையால் இப்போது மொத்தமாய் எவ்வளவு மதிப்பு கூறலாம்?

மூதாட்டி:—என் பிரபு குறைந்தது ஐந்நூறு ரூபாய் செலவு செய்யப் பின்னிடையார் என்று நினைக்கிறேன்.

சின்னப்பன்:—சரி போதும். நான் அதற்குத் தக்க மாதிரி ஏற்பாடு செய்வேன், சாதாரண மரத்திற்குத் தக்க விதமாய் வர்ணம்பூசி அதைத் தேக்குமரம் மாதிரி செய்து விடுவேன். அதற்குத் தக்கபடி மற்ற துணி அலங்காரங்கள் யாவற்றையும் சரியாய்ச் செய்ய என்னால் முடியும். இந்தப் பிரபுக்களெல்லாம் வீண் பெருமைக்கும் படாடோபத்திற்குமே இத்தகைய விஷயங்களைச் செய்வார்கள். இவர்கள் செல்வமனைத்தும் நல்ல வழியில் சம்பாதிக்கப்பட்டதல்ல. நீமட்டும் இதில் சரியாய் நடந்துகொண்டால் நம்மிருவருக்குள் முந்நூறு ரூபாய் பகிர்ந்து கொள்ளலாம்.

மூதாட்டி:—"ஆகா! நீ மிக்க சூக்கும புத்தியும் சாமர்த்தியமு முடையவன். உன்னைப்போன்ற ஆசாமி நமது நாட்டிற்கு முதன் மந்திரியா யிருக்கவேண்டும்" என்று மிக்க சந்தோஷத்தோடு புகழ்ந்து கூறினள்.

சின்னப்பன்:—எனக்கு இந்த வேலையே திருப்தி. இதிலேயே கடவுள் எனக்குப் போதுமான வருமான வரும்படி யளித்திருக்கிறார். இப்போது நாம் இங்கு செய்ய வேண்டிய வேலை முடிந்ததென்று கருதுகிறேன்.

மூதாட்டி:—இன்னும் ஒரேயொரு கேள்வி. எப்போது அடக்கம் செய்ய நாள் வைத்துக் கொள்ளலாம்?

சின்னப்பன்:—"இன்று எட்டாவது நாள் வைத்துக்கொண்டால் என்ன? சவம் சேர்த்தியான நிலைமையிலிருக்கிறது. ஏழுநாட்கள் வைத்துக்கொண்டால் தான் அது ஒழுங்காய்த் தோன்றும். ஏனெனில் நல்ல சாமான்கள் சேகரித்துக்கொண்டு பெட்டியை ஆயத்தம் செய்ய

வேண்டுமென்றும் செங்கல் சுண்ணாம்பில் சவக்குழி கட்டவேண்டுமென்றும் அபிநயம் செய்யவேண்டும். நானென்னமோ பச்சை மண் கல்லில் சேறுபூசிக் கட்டிவிட்டு மேலே சுண்ணாம்பு சன்னமாய்த் தடவி விடப் போகிறேன்" என்றான்.

அதன் பிறகு இருவரும் அறையைவிட்டு வெளிப்பட்டார்கள். கதவு மூடப்பட்டது.

அமிர்தாம்பாள் மறுபடி தனியாய் விட்டாள். கதவு மூடப்பட்ட சத்தம் கேட்டதும் பேசிக்கொண்டிருந்த இருவரும் போய்விட்டார்களென்றும் தான் தனியாகவே யிருப்பதாகவும் உணர்ந்தாள். ஆனால் அந்தோ கடவுளே! அவள் மனோ நிலைமை யிப்போ தெப்படி யிருக்கிறது—அம் மூதாட்டியும் சின்னப்பனும் பேசிய சங்கதிகள் முழுமையும் அவள் கேட்டாள். உயிரோடிருப்பவள் தன்னைப்பற்றி இத்தகைய சங்கதிகளைக் கேட்டால் அவள் மனம் எப்படி தீப்பற்றி எரியும் என்பதை யிதை வாசிப்போரே ஊகித்துப் பார்த்தால் நன்குணர்ந்து கொள்ளலாகும். அத்தகைய மனோவேதனையைச் சகிக்கமுடியாமல் அக்கன்னிகை கடைசியில் மூர்ச்சை யடைந்தாள்.

77 - வது அத்தியாயம்

ஸர்தார் சூரியநாயகம், பிரபுவின் வீட்டிலிருந்து வெளிப்பட்டதும், இளவாசன் மாளிகைக்குச் சென்று மதனவல்லியைக் கண்டார். முன்பு அவள் தங்கை யாகிய கோமளவல்லி சுகசிங்கம் பிரபுவிடம் பெரிய ஆபத்தில் சிக்கியிருந்தபோது மதனவல்லியின் கோரிக்கைப்படி ஸர்தார் சூரிய நாயகம் சென்று அவளை மீட்டுவந்ததும் ஸர்தாருக்கும் மதனவல்லிக்கும் எத்தகைய நட்பு இருக்கிற தென்பதும் நமது நண்பர்கள் அறிந்த விஷயமே.

மதனவல்லி ஸர்தாரைக்கண்டதே அன்போடு தக்க உபசாரம் செய்து ஆசனத்தி லமர்த்தியபின், "சற்று முன்பு தான் தங்கள் மாளிகையில் இரவுநேர்ந்த ஆபத்தைப்பற்றி பத்திரிகையில் பார்த்தேன். அந்தோ என்மனம் மிக்க வேதனை யடைந்தது. எப்படியோ கடைசியில் தாங்கள் சுகத்தோ டிருப்பதைப்பற்றி சந்தோஷப் படுகிறேன். ஆனால் தங்கள் தேகம் மிக களைப்படைந்து இருக்கிறது" என்றாள்.

ஸர்தார்:—ஆ! நான் பட்டதும் படுவதுமாகிய வேதனைகளைக் கேட்டால் அப்போது உனக்கு உண்மை தெரியும்.

மதனவல்லி:—"அப்படிப்பட்ட விஷயம் என்னவென்பது எனக்கு விளங்கவில்லை" என்றாள்.

அதன்மேல் ஸர்தார் தன் மாளிகை தீப்பற்றி யழிந்த விவரத்தைக் கூறியதோடு, அமிர்தாம்பாள் தன்னிடம் சிக்கிய சந்தர்ப்பத்தையும், அவள் தன்னைப் பிராணபத்தி

லிருந்து காப்பாற்றியதையும், பிறகு வீட்டில் தீப்பற்றிய விவரத்தையும், அப்போது அவள் எம்மாகிரி அங்கிருந்து கள்ளரால் சுகசிங்கம் பிரபுவின் வீட்டிற்குக் கொண்டு போகப்பட்டதும், அங்கு நடந்த அக்கிரமமான விஷயங்களும், அவள் மாணமடைந்த விவரத்தையும் யாவும் விவரமாய்க் கூறினார்.

இவர் கூறிய யாவும் கேட்ட மதனவல்லி மிக்க கோபமடைந்து, "ஓ கடவுளே! இப்பாமதுஷ்டனுகிய சுகசிங்கம் பிரபுவுக்கு எப்போது தான் தக்க சிட்சை செய்வீரோ?" என்றுள்.

ஸர்தார்:—"மதனவல்லி! இனி நான் உன்னைக் கோரிவந்த காரியத்தைக் கூறுகிறேன். உண்மையில் நான் உன்னை யொருவாங் கேட்கவே வந்தேன்" என்றூர்.

மதனவல்லியிடம் ஸர்தார் அமிர்தாம்பாளின் விஷயங்களைப்பற்றிக் கூறியபோது, அவள் தமையன் ஆபத்தில் சிக்கிக்கொண் டிருப்பதையும், அவன் உண்மையில் நிரபாதியென்பதைப் பற்றியும், அவனுக்கு மன்னுப்பு சம்பாதித்துக் கொடுக்கத் தான் மிக்க ஆவலுள்ளவளு யிருப்பதையும் யாவும் கூறியதால் அவள் அவரைநோக்கி,

"தங்களுக்கு எத்தகைய உதவி செய்யவும் நான் எப்போதும் மிக்க ஆவலும் சந்தோஷமும் உடையவளாயிருக்கிறேன் என்பது தங்களுக்குத் தெரிந்ததே. ஆனல் இப்போது தங்களுக்கு வேண்டிய உதவி யின்னதென்று எனக்குப் புலப்படுகிறது. அது என்னவெனில் அமிர்தாம்பாளின் தமையனுக்கு மன்னுப்பு வாங்கித்தரவேண்டு மென்பதே" என்றுள்.

ஸர்தார்:—"ஆ! அதுவே. அது தான் என்பெரிய ஆவல்" என்றூர்.

இம்மொழிகளைக் கேட்டதே மதனவல்லி ஒருவிடையும் பகாது "இதோ வருகிறேன்" என்று மட்டும் கூறிக்கொண்டே எழுந்து அறையைவிட்டு வெளியிற் சென்றாள்.

சென்றவள் அரைமணி நேரமாயும் வாராததைக்கண்ட ஸர்தார் மிக்க வியப்படைந்தார். இவள் என்னவேலையாய் இப்படி யிடையில் எழுந்து திடீலென்று சென்றாள் என்பது அவருக்கு விளங்கவில்லை. அவர் இவ்வாறு கலவரத்திலேயே யிருக்கையில் சுமார் ஒருமணி நேரம் கழித்து மதனவல்லி அறைக்குள் திரும்பி வந்தாள். அவள் முகத்தில் உண்டாயிருந்த ஒருவித பிரகாசத்தையும் சந்தோஷமான குறியையும் கண்டு ஸர்தார் வியப்படைந்தார்.

மதனவல்லி அவரைநோக்கி:—"இதோ தாங்கள் கோரிய மன்னுப்புப் பத்திரம். நான் சென்றவேளை நற்காலமாய் இளவரசரிடம் உள்நாட்டுக் காரியதரிசி வந்து பேசிக்கொண்டிருந்தார். அக்கன்னிகையின் பரிதாப நிலைமையையும், அவள் சகோதரனுடைய கோரமான சரித்திரத்தையும் கூறியதே காரியதரிசியே மனமிரங்கி இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் மன்னுப்பளிக்க வேண்டியதே யென்றார். உடனே இப்பத்திரம் வரையப்பட்டது" என்று கூறிக்கொண்டே தன் மடியிலிருந்து ஒரு கடிதத்தை யெடுத்துக் கொடுத்தாள்.

அதைக்கண்ட ஸர்தாருக்குண்டான சந்தோஷத்தை யின்னவிதமான தென்று யாரால் கூறமுடியும். அவர் தக்கபடி அவள்செய்த உதவிக்காக வந்தனம் புரிந்தபின், "இனி நான் துரிதமாய்ச் சென்று நீசெய்த உதவியை நிறைவேற்ற அனுமதி யளிக்கிறாயா?" என்றார்.

மதனவல்லி:—ஆம், ஆம். சீக்கிரமாய்ச் சென்று அவ்வாலிபன் மனதிற்கு நிம்மதியை யுண்டாக்க வேண்டியது அவசியமே என்று கூறினாள்.

ஸர்தார் இராஜ மாளிகையை விட்டுப் புறப்பட்டதும் நேராய்த் தமது வீட்டிற்குச் சென்று, உடனே அமிர்தாம் பாள் தமையனுக்கு ஒரு கடிதம் எழுதினர். அதில் அவன் தங்கை,வீடு தீப்பற்றியதில்சிக்கிக்கொண்டதனுல் உண்டான திகிலினுல் மரணமடைந்ததாகப் பக்குவமாய் எழுதி மன் னுப்புப் பத்திரத்தை வைத்து ஒரு ஆள்வசம் அனுப்பினர். அந்த ஆள் அதி துரிதமாய்ச்சென்று அவ்வாலிபனைத் துறை முகத்திலேயே கண்டு கடிதத்தைக் கொடுக்கவேண்டுமென் றும் அப்படி யவன் நாட்டை விட்டுப் போய்விட்டிருந் தால் உடனே பின்தொடர்ந்து சென்று அவனைக் கண்டு பிடித்து கடிதத்தை யவனிடமளிக்க வேண்டும் என்றும் கட்டளையிட்டுத் தாராளமாய்ச் செலவிற்குப் பணம்தந்து அனுப்பினர்.

இரண்டு தினங்கள் கழிந்தன. மூன்றும்நாள் காலை ஸர்தாரின் வேலைக்காரன் முதலில் அமிர்தாம்பாள் தமை யன் விஸ்வநாதனுக்குக் கடிதமும் பணமும் கொண்டுபோன வன் திரும்பிவந்தான். அவன் ஸர்தாரைக் கண்டுத் தான் விஸ்வநாதனைத் துறைமுக நகரில் குறித்த விடத்தில் சந்தி த்து ஸர்தார் கொடுத்த கடிதத்தையும் பணத்தையும் அளி த்ததோடு, தானே அவனுக்குத் துணையாயிருந்து கப்பலுக் குப் பிரயாணச் சீட்டுவாங்கி அவனைப் பாஞ்சாலநாட்டிற்குச் செல்லும் கப்பலில் ஏற்றிவிட்டு கப்பல் துறைமுகத்தை விட் டுச் சென்ற மறுநாள் தான் அந்த ஊரைவிட்டு வந்ததாகக் கூறினன். இதனுல் இரண்டாவது ஆள் மன்னுப்புப் பத்தி ரம் கொண்டுபோனவன் விஸ்வநாதனைத் துறைமுக நகரத் தில் சந்திக்க முடியாதென்று ஸர்தார் தெரிந்துகொண்டார்.

மறுநாள் ஸர்தார் சுகசிங்கம் பிரபுவின் மாளிகைக்குச் சென்றார். இவர் கோமளவல்லியைச் சுகசிங்கம் பிரபுவின்

அக்கிரமமான சூட்சியிலிருந்து மீட்டுவிட்டது முதல் தெய்வயானைக்கு அவர்மேல் மிக்க வெறுப்பே. அச்சமையம் பிரபு வீட்டிலில்லை. ஸர்தார் சவம் இருக்கும் அறைக்குள் சென்று கதவை மூடிவிட்டுத் தான் பிரேதம் என்று கருதியிருக்கும் அமிர்தாம்பாளின் அருகில் நின்று அவள் முகத்தை யுற்றுப் பார்த்து,

"அந்தோ! தூங்குகிறவள்போலவே காண்கிறதே. மெய்யாலுமே இறந்திருப்பாளா? அப்படிக் கொஞ்சமும் தோன்ற வில்லையே. அய்யோ கடவுளே! எனக்கு இத்தகைய வியாகூலத்தையும் உண்டாக்கலாகுமோ? இது தர்மமோ, கருணையோ. நான் இவள்மேல் மிக்க பரிசுத்தமான காதல்கொண்டிருந்தேனே. அந்தோ இவள் சகோதரனுக்குப் பூரண மன்னுப்பு கிடைக்கும்படி செய்து விட்டு அவன் சம்மதத்தைப் பெற்று இவளைக் கூடிய சீக்கிரத்தில் மணம் புரிந்து கொள்ளலாமென்று உள்ளத்தில் கருதியிருந்தேனே! என் எண்ணமெல்லாம் வியர்த்தமாய்ப் போய்விட்டதே. அந்தோ! இவள் என்னை மணம்புரிய மறுத்துவிட்டாலும், எப்படியாவது சுகத்தோடு தனக்குப் பிரியமானவனை மணம் புரிந்துகொண்டு க்ஷேமமாய் வாழ்ந்திருந்தால் நான் மிக்க சந்தோஷ மடைவேனே" என்று வாய்விட்டுப் பிரலாபித்தார். அச்சமயம் அவரையு மறியாமல் அவர் கண்களினின்று நீர் வடிந்தது. அதில் இரண்டுதுளி அமிர்தாம்பாள் முகத்தின்மேல் விழுந்தது.

நேயர்களே! இடையில் ஸ்மரணையற்றுக் கிடந்த அமிர்தாம்பாள் ஸர்தார் வரச் சற்றுநேரம் இருக்கும்போதுதான் ஸ்மரணையடைந்து நடந்த சம்பவங்கள் யாவும் நினைவிற்கு வந்ததால் சொல்லொணு வேதனையிலிருந்தாள். அச்சமயம் திடீலென்று கதவு திறக்கப்பட்ட சத்தம் அவள் செவி

களில் விழுந்தது. இரண்டொரு நிமிடங்களில் ஸர்தார் தன் அருகில் இருப்பதையும் அவர் குரலையும் உணர்ந்தாள். அவர் கூறிய வார்த்தைகளனைத்தும் ஒன்று தவிராமல் கேட்டாள். அதுமட்டுமல்ல. அவருடைய கண்ணீர்த் துளிகள் தன் முகத்தின் மேல் விழுந்ததையும் உணர்ந்தாள்.

அந்தோ! அப்போது தான் அவர் தன்மேல் அத்தகைய உத்தமமும் கௌரவமுமான காதல்கொண்டிருக்கிறுரென்று தெரிந்தது. அப்போது அவள் மனம் பட்ட வேதனையை யாரால் சொல்லமுடியும்? தன் அறிவில் எல்லா விவகாரமும் புலப்படுகிறது. தேகத்தின் எந்த அவயவமும் தன் சுயாதீனத்திலில்லை. எப்படியாவது தான் உயிரோடிருப்பதாய்ச் சமிக்கை செய்யலாமென்றால் கண் இரப்பையைக் கூடத் திறக்கமுடியவில்லை. அவள் மனோவேதனை நாகவேதனையினும் பன்மடங்கு அதிகமென்று ஒரு அளவு கூறலாம். ஸர்தாரின் மொழிகளைக் கேட்டு இத்தகைய நிலைமையிலிருக்கையில் கதவு மூடப்படும் சத்தம் அவள் செவிகளில் கேட்டது. அந்தோ அச்சமயம் அவள் மனம் பட்டபாடு கடவுளுக்கே தெரியும்.

ஸர்தார் சென்றபின் அவள் பட்ட மனோ வேதனைக்கு அளவில்லை. ஸர்தார் தன்னை மணம்புரிய விரும்புகிறுர் என்று அவள் அறிந்ததே அந்தோ! உலக சுகம் இவ்வளவிருக்கும்போது தான் மரிப்பதாயிருந்தால் யாருக்குத்தான் மனம்தாளும். அதிலும் தான் உண்மையாய்ச் சாகவில்லையே. யாவரும் தன்னை இறந்தவளாகவே கருதியிருக்கிறுர்கள். நடக்கிற விவகாரங்களால் தன்னை யுயிரோடேயே புதைத்து விடுவார்களென்று தெரிகிறது. அந்தோ! இது எவ்வளவு கோரம். உயிரோடு புதைப்பட்டால் பிறகு மூச்சுவிட முடியாமல் எவ்வளவு அவஸ்தைப் பட்டு மடியவேண்

டும். யாவர்க்குமே சாதாரணமாய் இதைக்கேட்டதே மனம் திடுக்கிட்டுப் பதைக்கும். அமிர்தாம்பாள் இவை யாவும் நினைத்து நினைத்து நாக வேதனைப்பட்டு "கடவுளே! முன்னுடியே யென் பிராணன் நீங்கிவிடச் செய்து என்னை யிக்கொடிய கோரமான மரணத்தினின்றும் காப்பாற்றலாகாதா. ஓ கருணா நிதியே! நான் பிறந்தது முதல் என்மனதார ஒரு பாபமும் செய்யவே யில்லையே. ஒருவர்க்கும் எத்தகைய பொல்லாங்கும் செய்யவில்லையே. தயவுசெய்து என்னை யிந்த இக்கட்டிலிருந்து காப்பாற்றவேண்டும் என்று மிக்க உறுக்கத்தோடு பிரார்த்திக்கத் தொடங்கிக் கடைசியில் வேதனை சகிக்க முடியாமல் களைத்து ஸ்மரணை யிழந்தாள்.

அவள் எங்கேரம் அப்படி யிருந்தோமென்று அவளுக்கே தெரியாது. பிறகு ஸ்மரணை வந்தபின் சீக்கிரத்தில் எல்லா நினைப்பும் வரவில்லை. சற்றுநேரம் கழிந்தபின் கொஞ்சம் கொஞ்சமாய் எல்லா நினைவும் வந்தது. "அந்தோ நாம் மரணமடைந்ததாய் யாவராலும் நம்பப்படுகிறோமே. உயிரோடு புதைக்கப்படப் போகிறோமே" என்று வேதனைப்பட்டுக்கொண் டிருக்கையில் அறையின் கதவு திறக்கப்படும் சத்தம்கேட்டது. அவள் கண்களைத்திறக்க முடியாவிட்டாலும் அறைக்குள் தீபம் எரியும் வெளிச்சம் அவளுக்குப்புலப்பட்டது. அதோடு அறைக்குள் ஒருவித சத்தம் கேட்டது. அதாவது மரச்சாமான்கள் ஒன்றோடொன்று முட்டிக் கொள்ளும் சத்தம் அவள் செவிகளில் கேட்டது.

அதோடு ஆட்கள் அறையில் நடமாடும் சந்தடியும் கேட்டது. "அந்தோ நமக்குச் சவப்பெட்டி கொண்டுவந்திருக்கிறார்கள்" என்று அவள் மனதிற் பட்டது. "ஐயோ கடவுளே! நாம் இன்னும் மரணமடையவில்லையே. நம்மை

உயிரோடு பெட்டியில் வைத்து மூடிவிடப் போகிறார்களே-அப்படியே மண்ணில் புதைத்துவிடப் போகிறார்களே" என்று அவள் மனதில் சொல்லொணு நரகவேதனை யுண்டாயிற்று.

அச்சமயம் சவத்தை யடக்கம்செய்யும் குத்தகைக் காரனுகிய சின்னப்பனையும் அவன் கூடவந்த இரண்டு மூன்று ஆட்களையும் நோக்கி வீட்டுக்காரியஸ்தி "நண்பர்களே! உட்காருங்கள் இதோ ஒருநொடியில் நல்ல குடிவகைகளும் சிற்றுண்டிகளும் கொண்டு வருகிறேன்" என்று கூறிவிட்டுச் சென்று துரிதமாய்த் திரும்பிவந்து தான்கூறிய வஸ்துக்களைக் கொண்டுவந்து அவர்கள் எதிரில் வைத்தாள். உடனே சின்னப்பனும் அவன் ஆட்களும் குடிக்கத் தொடங்கினார்கள்.

சின்னப்பன்:—ஆ! இத்தகைய சவத்தை நான் கண்டதேயில்லை. இதன் முகத்தில் மற்ற சவங்களுக் குண்டாவதுபோல் நீல நிறமுண்டாகவில்லை. தேகம் விறைக்கவுமில்லை. தூங்குவதுபோ லிருக்கிறதே யன்றி உயிர் நீங்கிய சவம்போல் சற்றும் தோன்றவில்லையே" என்றான்.

சின்னப்பன் நண்பர்களில் ஒருவன் "ஆம், ஆம்; அப்படி யிருந்தாலும் அந்த நிலைமை எனக்கு வேண்டாம்" என்றான்.

மற்றொருவன்:—"எப்படி யிருந்தாலும் கடைசியில் குழியில் வைத்து புதைக்கப்பட்டபின் மற்ற சவங்களைப்போல் மண்ணோடு மண்ணுய் மக்கி யழிய வேண்டிய தேகந் தானே" என்றான்:

அமிர்தாம்பாள் செவியில் இவர்கள் சம்பாஷணை முழுதும் கேட்டதென்றால் அச்சமயம் அவள் மனம் எத்தகைய

வேதனை யடைந்திருக்குமென்பதை இதை வாசிப்போரே யூகித்துக் கொள்ளலாகும்.

அவள் இத்தகைய பிராண வேதனையில் இருக்கும் போது, சின்னப்பனும் அவன் ஆட்களும் திருப்தியாய் மதுபான மருந்தி சிற்றுண்டிகளைப் புசித்தபின் எழுந்து வந்து அவளைச் சூழ்ந்து நின்று, "இனி சவத்தைப் பெட்டியில் அடக்கம் செய்ய வேண்டியதே" என்றான். மற்ற ஆட்களும் ஆம் ஆம் என்றார்கள். உடனே அவர்கள் தேகத்தை யெடுத்து சவப்பெட்டியில் வைத்தார்கள்.

தானப்பன்:—"ஆகா! என்ன சுந்தரம்! என்னவனப்பு! இத் தேகம் சவங்கள் சுபாவமாய் அடையும் நீலநிறம், முகம் கட்டைபோல் விறைத்து சற்றும் பிரகாசமின்றிப் போதல், தேகம் விறைத்துவிடல் முதலிய மாறுதல் களையின்னு மடையவில்லையே. ஆயினும் இது ஒரு அபூர்வமான சவமே. இதை யிப்போதே பெட்டியில் வைத்ததோடு மேல்மூடியைத் தைத்துவிட்டால் இது சீக்கிரத்தில் மாறி அழுகிவிடும். ஆகையால் சவம் அடைக்கப்படும் தினம் நெருங்குமட்டும் இந்த மேல் மூடியைத் தைக்காமல் வைத்து வைப்போம்" என்றான்.

நண்பர்களே இச்சம்பாஷணை உயிரோடும் பூரண பிரக்ஞையோடு மிருக்கும் அக்கன்னிகையின் செவிகளில் நன்றாய்க் கேட்டதென்றால், அவள்மனம் எத்தகைய வேதனை யடையும் என்பதை நீங்களே சிந்திக்கலாம். "அய்யோ நமக்கு எல்லா நினைப்பு மிருக்கிறதே உயிர் இன்னும் நீங்கவில்லையே—நம்மையுயிரோடு புதைத்து விடவல்லவா போகிறார்கள். நமக்கு உயிரும் அறிவும் இருந்தாலும், நமது தேகத்தின் ஒரு அவயவ மாயினும் நமது சுயாதீனத்தி லில்லையே.

நாம் உயிரோடிருப்பதாய்ச் சமிக்கை செய்யக்கூட நம்மால் முடியவில்லையே'' என்று அவள் மனதில் பெரியவேதனை யுண்டாயிற்று. அமிர்தாம்பாள் அதைச் சகிக்க முடியாமல் உடனே ஸ்மரணையற்றுப் படுத்து விட்டாள்.

---

78 - வது அத்தியாயம்

கடைசியில் சவம் அடக்கம் செய்யப்படும் நாள் வந்தது. அன்று காலை சின்னப்பனும் அவன் ஆட்களும் வந்து சவப்பெட்டியின் மேல்மூடியை மரையாணிகள் பிகிந்து தைத்து விட்டார்கள். ஆனால் கடவுள் தயவால் அவளுக்கு அதனால் சுவாசபந்தன முண்டாக வில்லை. ஏனெனில், உயிர் இருந்து அறிவின் பிரகாசமும், எல்லாநினைப்பும் இருந்தாலும் சுவாச இயக்கமில்லை யாதலால் அதனால் ஒரு கஷ்டமு மில்லை. அவள் நிலைமை ஒரு அபூர்வமான நிலைமையாய் இருந்தது. இடையில் அபூர்வமான கனவுகளைக் கண்டது போல் அவளுக்குப் புலப்பட்டது. ஒரு சமயம் எங்கோ பயங்கரமான நாட்டில் இருப்பதாகவும் சொல்லொணாத் துன்பங்களை யனுபவிப்பதாகவும் கண்டாள்.

பிறகு தான் தேவலோகத்தில் வாசம் செய்வதாகவும் மிக்க அருமையான போகபாக்கியங்களை யனுபவிப்பதாகவும் கண்டாள். கடைசியில் அவளுக்கு மறுபடி ஸ்மரணை வந்தபோது, யாரோ கதவைத் திறப்பதுபோல் சத்தம் கேட்டது.

மறு நிமிடம் சுகசிங்கம் பிரபு, ஸர்தார் சூரிய நாயகம் இருவருடைய குரலும் அவளுக்குக் கேட்டது. பிறகு கீழ்க் கண்ட சம்பாஷணை அவளுக்குக் கேட்டது:—

ஸர்:—யார் நம்மோடுகூட மயானத்திற்கு வருவது?

பிரபு:—யார் வருவது? பார்வைக்காவது, யாராவது வேண்டும். சவம் அடக்கம் செய்யும் சின்னப்பன் முதலியவர்கள் வருவாகள்.

ஸர்:—பார்வைக்கா? சரிசரி எப்படியோ ஆகட்டும். இப்போது மயானத்திற்குப் போகவேண்டிய காலம் நெருங்குகிறது. எல்லாம் தயாராயிருக்கின்றனவா?

அச்சமயம் ஒரு வேலைக்காரன் அறைக்குள் வந்து, ஸர்தார் சூரியநாதரை நோக்கி, "பிரபுவே! ஒரு மரியாதையான வாலிபர் வந்திருக்கிறார். அவர் இந்த நிமிடமே தங்களைக் காணவேண்டு மென்கிறார். என்ன சொன்னாலும் கேட்கவில்லை" யென்றார்.

இம்மொழிகளைக் கேட்டதே ஸர்தார் மிக்க மனக்கிளர்ச்சியடைந்து "ஓகோ! அவன் விஸ்வநாதனாகவேயிருக்கவேண்டும்" என்றார்.

பிரபு:—"யார்? இறந்துபோன இக்கன்னிகையின் சகோதரனா?" என்று மிக்க திகிலோடு கேட்டார்.

ஸர்:—ஆம்; ஆம். அவனாகவே யிருக்கவேண்டும்.

பிரபு மிக்க திகிலோடு வாய்குழறிக்கொண்டே "அய்யோ! என்னைக் காட்டிக்கொடுத்துவிட மாட்டீரே?" என்று நடுக்கத்தோடு கேட்டார்.

ஸர்:—"இல்லை யில்லை" யென்று கூறிவிட்டு வேலைக்காரனை நோக்கி, "உடனே யந்த வாலிபரை யுள்ளே வரும்படி செய்" என்றார்.

வேலைக்காரன் திரும்பிச் சென்றதே சற்றுநேரத்திற்குள் மிக்க மரியாதையும் கெம்பீரமுமான தோற்றமுடைய

அழகிய ஒரு வாலிபன் அறைக்குள் வந்தான் அவனைக் கண்டதே அங்கிருந்த சின்னப்பனும் அவன் ஆட்களும் பாம்புகளைப்போல் அறையைவிட்டு நழுவி விட்டார்கள். ஸர்தார்? வாலிபனைக்கண்டதே ஆ! விஸ்வநாதம் என்று நம்புகிறேன் என்றார்.

வாலிபன்:—"ஆ! தாங்களே ஸர்தார் சூரியநாயகம் என்று தெரிகிறது" என்று கூறியதும் அவர் இருகரங்களையும் அன்போடு கெட்டியாய்ப் பற்றிக் கொண்டான்.

அச்சமயம் அவன் தன் நன்றியறிதலை வேறுவிதமாய் வெளியிடக் கூடவில்லை.

ஸர்:—"அந்தோ விஸ்வநாதம். நான் இச்சமயம் உனக்கு மிக்க மனத்துயரத்தை யுண்டாக்கும் காட்சியையே காட்ட வேண்டியவனுயிருக்கிறேன்" என்றார்.

விஸ்வநாதன் சவப்பெட்டியை யுற்றுநோக்கியதும் அதன் அருகிற் சென்றதும்,

"அந்தோ! கடவுளின் கட்டளையைத் தடுக்க நம்மால் முடியாது. ஆயினும் நான் கடைசிமுறை யொருதரம் என் அன்பார்ந்த தங்கையின் வதனத்தைக் கண்டிருந்தால் என் மனம் சற்று நிம்மதியா யிருக்கும். அந்தோ உலகில் நாங்கள் இருவருமே ஒருவருக்கொருவர் ஆதாரணையா யிருந்தோமே" என்று கண்ணீரை யாருய்ப்பெருக்கினுன். அவன் மனத்துயரைக் கண்ட ஸர்தார் மனங்கரைந்து "ஓ! விஸ்வநாதம். உன் தங்கையின் முகத்தைப் பார்க்கவேண்டுமென்று உனக்கு மிக்க ஆவலாயிருக்கிறதோ?" என்றார்.

விஸ்வநாதன்:—"ஓ ஸர்தார்! நாங்கள் இளவயதிலேயே பெற்றோரை யிழந்துவிட்டு இருவருமே வசித்துக் கொண்டிருந்தோமென்பதையும், நாங்கள் எத்தகைய

சகோதா சகோதரி வாஞ்சையோடு ஒருவரை யொருவர் நேசித்து இரண்டுடலும் ஒரு உயிரும்போல் இருந்தோ மென்பதையும், நான் என் தங்கையின் உயிரை விபாதியினின்று காப்பாற்றுவதற்கே சிறைவாசத்தண்டனை யடையத்தக்க குற்றத்தைத் துணிந்து செய்தேனென்பதையும், என்னை அபாயமான தண்டையினின்றும் காப்பாற்றத் துணிந்து என் தங்கை எவ்வளவோ பாடுபட்டு என்னைச் சிறைச்சாலையிலிருந்து தப்பித்துக் கொண்டு வெளிவரும்படி செய்தா ளென்பதையும் தாங்கள் விபாமாய் அறிந்தால் இக்கேள்வியைக் கேட்கவே மாட்டீர்கள்" என்றான்.

ஸர்:—"விஸ்வநாதம்! உன்கோரிக்கை நிறைவேற்றப்படவேண்டியதே கட்டாயம் நிறைவேற்றப்பட வேண்டியதே. இன்றேல் அதைச்செய்ய மறுப்போர்க்குப் பெரும்பாதகமே சித்திக்கும்" என்றுகூறிவிட்டு,

உடனே சின்னப்பனைக் கூப்பிட்டு "சீக்கிரம் இச்சவப் பெட்டியைத் திற! இந்த வாலிபப் பெரியமனிதர் அக்கன்னிகையின் சகோதரர்" என்றார்.

உடனே சவப்பெட்டி திறக்கப்பட்டது. ஸர்தார் விஸ்வநாதனை யருகிலழைத்துச் சென்று, "இதோ பார் உன் அன்பார்ந்த தங்கையை. அந்தோ! மாணத்திலும் இவள் முகத்தில் வனப்பு குன்ற வில்லையே. நித்திரை செய்கிறவள்போலவே யிருக்கிறதே" என்றார்.

விஸ்:—"அந்தோ இறந்ததாகவே காணவில்லையே! தங்கையே நீ யிம்மாதிரி யென்னை மோசம் செய்து விட்டுப் பிரிந்துபோய் விடுவாயென்று நான் கனவிலும் நினைக்கவில்லையே. அதி[illegible]மது பூர்வபுண்ணியத்தால்

N22 MN K120.9.8
186549
சென்னை-600 008

நமது இக்கட்டுகளை யொழித்து, நம்மை நல்லநிலைமைக்குக் கொண்டுவரப் பாடுபடும் புண்ணிய புருடரின் துணை கிடைத்த சமயத்தில் இப்படிப் பேரிடி விழுமென்று, கடவுளே! நான் நினைக்கவில்லையே,'' என்று கதறினன்.

நேயர்களே! அமிர்தாம்பாள் சவப்பெட்டியில் மூடப்பட்டிருந்தாலும் அதன்மேல் மூடி திறக்கப்பட்டதே நல்ல காற்று முகத்தில் வீசியதால் அவள் அறிவு தெளிவடைந்தது. இப்போது தன் சகோதரனே தன் அருகில் வந்து நின்று பிரலாபிக்கிறுன் என்று உணர்ச்சி யுண்டாயிற்று. இதுகாறு முண்டானதைவிட இந்த உணர்ச்சி அவளால் சகிக்கக் கூடாததாய் விட்டது. அதனல் நரம்புகள் அதிக படபடப் படைந்தன. உடனே அவள் தேகத்தில் அதிக உணர்ச்சி யுண்டாயிற்று. இதைக்கண்ட விஸ்வநாதன் துள்ளிக் குதித்து, "ஆ அதிசயம்! அதிசயம்! உதடுகள் அசைகின்றன'' என்றுன்.

ஸர்:—"அந்தோ நமது மனதின் கலவரத்தால் அப்படித் தோற்றலாகும்" என்ருர்.

விஸ்வ:—'இல்லை யில்லை. இதோ பாரும், பாரும்'' என்ருன்.

ஸர்தார் அருகில் சென்று அமிர்தாம்பாள் முகத்தைக் குனிந்து உற்றுப்பார்த்து மிக்க மனக்களிப்பும் சொல்லொணு வியப்பு மடைந்து, "ஓ கடவுளே. ஆம் ஆம் உண்மையே. உயிர் இருக்கிறது" என்ருர்.

உடனே பெருங் குழப்பம் உண்டாய் விட்டது. தெய்வயானையும் விட்டுக் காரியஸ்தரும் தட்சணம் அழைக்கப்பட்டார்கள். அமிர்தாம்பாள் பெட்டியிலிருந்து வெளியிலெடுக்

12730
ECO103

கப்பட்டு மஞ்சத்தில் கிடத்தப்பட்டாள். சின்னப்பனும் அவன் ஆட்களும் அதே விநாடி வீட்டிலிருந்து வெளியனுப் பப் பட்டார்கள். ஸர்தார் உடனே டாக்டரை யழைத்து வரச் சென்றார்.

அவர் சென்று, அவள் தன் வீட்டிலிருந்தபோது சிகிச்சை செய்த டாக்டரை அழைத்துக்கொண்டு வந் தார்.

இதற்கிடையில் அமிர்தாம்பாளுக்கு பூரண சுயாதீன முண்டாய் விட்டது. புலன் பொறி காரணங்கள் இந்திரியங் கள் முதலிய யாவும் தந்தம் தொழிலைச்செய்யத் தொடங்கி விட்டன. அச்சமயம் தமையனும் தங்கையும் சந்தித்தபோ துண்டான ஆனந்தத்தை இத்தகைய தெனக் கூற ஒருவ ராலும் முடியாது. தெய்வயானையும் வீட்டுக் காரியஸ்தியும் அமிர்தாம்பாள் பூரணஸ்மரணையும் அறிவும் அடைந்ததை யுணர்ந்ததே இங்கு தன் விஷயத்தில் நடந்த அக்கிரமங்களை யெங்கே யவள் தன்தமையனிடம் கூறிவிடுவாளோ வென்று மிக்க பீதியடைந்தார்கள்.

அதனால் அவர்கள் ஏதோ அமிர்தாம்பாளுடைய நன் மைக்காக மிக்க அக்கரையாய்ப் பேசுகிறவர்கள்போல் அபி னயித்து விஸ்வநாதனை நோக்கி,

தங்களைக் கண்ட சந்தோஷத்தால் இவளுக்கு மிக்க மனத்துடிப்பு யுண்டா யிருக்கிறது. இது அதிகமானால் கெடுதிசெய்யும். ஆகையால் தாங்கள் சற்று இவள் பார்வை யில் படாமல் இருந்து பின்னால் வந்தால் நலமாயிருக்கும் என்று ஜாலம் செய்தார்கள்.

விஸ்வநாதன், "அந்தோ நமது தங்கையின் நன்மைக் காகத்தானே இவர்கள் இப்படிக் கூறுகிறார்கள்" என்று

தீர்மானித்துக்கொண்டு அப்படியே நடந்திருப்பான். ஆனல் அமிர்தாம்பாள் அச்சமயம் மிக்க பலயீனமான நிலைமையிலிருந்தபோதிலும், தெய்வயானையும் காரியஸ்தியும் இருப்பதைக் கண்டு அவர்கள் கூறியதையும் கேட்டதோடு, சுகசிங்கம் பிரபு அவர்கள் பின்னுல் வந்து நிற்பதையும் கண்டாளானதால், இவர்கள் நமக்குக் கெடுதிசெய்வார்களென்ற உணர்ச்சியால், மிக்க பீதியடைந்து, தமையனைக் கெட்டியாய்ப்பிடித்துக்கொண்டு "அண்ணு! உன் புண்ணியத்திற்கு என்னை யிவர்களிடம் தனியாய் விட்டுச் செல்லாதே" என்று அவன் செவிகளி லுரைத்தாள்.

தங்கையின் மொழிகளைக் கேட்ட விஸ்வநாதன், புத்திசாலி யாதலால், "ஓகோ இங்கு இம்மனிதர்களால் நமது தங்கைக்கு ஏதோ கெடுதி நடந்திருக்கிறது; அதற்காகவே இப்போது தனியாய் அவர்கள் வசத்திலிருக்க அஞ்சுகிறுள்" என்று உணர்ந்து கொண்டான். இதுமட்டுமல்ல. சுகசிங்கம் பிரபுவின் நடவடிக்கையைப்பற்றி தான் முன்னமே ஒருவாறு கேள்விப்பட் டிருக்கிறுன். ஆகையால் இத்தகையவன் வீட்டில் தன் தங்கை யிறந்ததாகக் கருதியதும் அவன் மனதில் மிக்க சந்தேகம் உண்டாய் விட்டது. அவன் மனதில் உடனே மிக்க வியாகூல முண்டாய்விட்டது. அதன்மேல் அவன் சிந்தித்துத் தன் தங்கைக்குத் தேறுதல் கூறுவதற்குள் டாக்டர் வந்து விட்டார். ஸர்தார் கூடவே வந்தார்.

அமிர்தாம்பாள் பூரண ஸ்மரணை யடைந்திருப்பதைக் கண்ட ஸர்தார் அடைந்த சந்தோஷத்திற்கு ஒரு அளவேயில்லை. அமிர்தாம்பாள் அவரைக்கண்டதும் அவர் வீட்டுக் காரியஸ்தியைக் கேட்டாள். அம்மூதாட்டி இக்கன்னிகை மேல் மிக்க அன்புடையவள். இந்த உண்மையை விஸ்வநாதன் உணர்ந்து கொண்டான் ஸர்தார் "நான்போய் ஒரு

கொடியில் அம்மாதை யழைத்து வருகிறேன்'' என்று கூறி விட்டுச் சென்றார். டாக்டர் கன்னிகையைக்கண்டு அவளுக்குத் தக்க ஔடதமளித்து சிகிச்சை செய்தார்.

அதற்குள் ஸர்தார் தன் வீட்டுக்காரியஸ்தியை யழைத்துக் கொண்டுவந்து விட்டார். அம்மூதாட்டி கன்னிகையைக் கண்டதும் மிக்க அன்போடு ஆலிங்கனம் செய்து கொண்டு கண்ணீர்விட்டுக் கடைசியில்,

“நான் அமிர்தாம்பாள் பூரண சுகமடையு மட்டும் அவளை விட்டு நகரவே மாட்டேன்'' என்றாள். அம்மொழிகளைக் கேட்ட சுகசிங்கம் பிரபு “அம்மா நீ இங்கிருக்கு மளவும் இந்த வீட்டை உன் சொந்தமனையாய்க் கருதலாகும்'' என்றார்.

இப்போது தன்மேல் அன்புள்ள ஜனங்களே தன்னைச் சூழ்ந்திருக்கிறார்க ளென்று கண்டதே அமிர்தாம்பாள் மிக்க சந்தோஷமடைந்தாள். அதனால் அவளுடைய களைப்பும் ஆயாசமும் பின்னும் குறைந்துவிட்டன. மத்தியில் அவள் சிலநாட்கள் தேக அவயவங்களின் சுயாதீனம் சற்றுமின்றி சுவாசமுமின்றி உயிரின் உணர்ச்சியும் மனதின் சிந்தனையோடும் மட்டும் இருந்தாலும், பசிதாகம் முதலிய உணர்ச்சி சற்றுமில்லாதவளா யிருந்தாள்.

நேயர்களே இச்சந்தர்ப்பத்தில் ஒருவிஷயத்தைப்பற்றி நாம் கூற விரும்புகிறோம்; ஆனால் அது சற்று கவனத்தோடு உணரவேண்டிய விஷயம். அதாவது இதில் கூறப்பட்ட அக்கன்னிகையின் நிலைமை ஒரு அபூர்வநிலைமையே. ஆனால் இதில் ஒரு அசம்பாவிதமான விஷயமிருக்கிறது. அது எதுவெனில் அவள் தான் ஜீவித்திருக்கும் உணர்ச்சியோடிருந்ததோடு கதவு திறப்பது ஆட்கள் பேசுவது முதலிய

விஷயங்களையவள் உணர்ந்து கொண்டிருந்ததாகவும் மனதில் தன் சகோதரன், ஸர்தார் முதலிய யாவர்களின் சிந்தனை யிருந்ததாகவும் கூறப்பட்டிருக்கிறது.

இதனுல் இந்திரியவாயிலாய் விஷயங்களை உணர்ந்தாள் என்று தெரிகிறது. மனம் தொழில்செய்தால்தான் அப்படி யறியமுடியும். ஆனுல் சுவாஸம் மட்டும் இல்லையென்று கூறப்படுகிறது. இது முழுதும் அசம்பாவிதம். ஏனெனில் மனம் வாயு சம்பந்தமானது. மனமசைந்தால் வாயுவசைந்திடும். மனதையடக்கச் சிலர் வாயுவை யடக்கிப் பழக்கம் செய்வதுண்டு. ஆனுல் மறுபடி வாயு சலிக்கும்போது மனம் கட்டாயம் சலித்துவிடும். ஆகையால் ஞானயோகிகள் வாயுவோடு வாதாடுவதைவிட்டு நேரே மனதை முறைப்படி யடக்க முயல்வார்கள். அது கைகூடும் விஷயம். மனம் அடங்கிவிட்டால் வாயு தானே யடங்கிவிடும். ஆனுல் மனம் தொழில் செய்துகொண்டிருக்கையில் வாயு ஒருபோதும் அடங்கியிராது. அதாவது வாயுவை யடக்கிவிட்டு மனதைத் தொழில் செய்விக்கமுடியாது. ஆகையால் இக்கதையில் கூறப்பட்டபடி அப்பெண் யாவற்றையும் உணர்ந்துகொண்டிருந்தாள் ஆனுல் சுவாசம் மட்டும் பந்தனப்பட்டிருந்தது என்பது நடக்கக்கூடாத காரியம். இக்கதையின் மூல நூலாசிரியர் மேல் நாட்டார்—கதையும் அவர்கள் ஆசாரவொழுக்கப்படி எழுதப்பட்டது. மேல்நாட்டாருக்கு மெய்ஞ்ஞான சம்பந்தமான சூக்கும தத்துவ ஞான உணர்ச்சி கிடையாதென்பதும் அவர்கள் ஆராய்ச்சி முழுதும் சடப்பொருள்களின் சம்பந்தமானதே யென்பதும் நன்கு விளங்குகிறது. இது ஒரு திருட்டாந்தமேயன்றி இப்போதுதான் புதிதாய் நம்மவரால் அறியப்படும் உண்மையல்ல.

முன் கூறப்பட்ட சங்கதிகள் நடப்பதற்கிடையில் சுக சிங்கம்பிரபுவும், தெய்வயானையும் எங்கு தங்கள் சதியாலோசனைகள் வெளியாய்விடுமோ வெனப் பெரும்பீதியடைந்தார்கள். ஸர்தார் பிரபுவை யொருபுறமா யழைத்து,

“நண்பரே! நீ அதிகமாய்ப் பயப்படவேண்டாம். இப்போது அக்கன்னிகை அபாயகரமான நிலைமையிலிருந்து நீங்கிவிட்டாள். அதுவரையில் அவள் சகோதரனுக்கு மிக்க திருப்தியே. ஆனால் நான் உண்மையாய் நடந்த சங்கதிகளை மறைக்க முடியாது. ஆனால் நான்கூறும் மாதிரியாலும் என் வேண்டுகோளுக் கிணங்கியும் அவன் இவ்விஷயத்தைப் பற்றி என் பிரியப்படி நடந்துகொள்வான். மேலும் இப்போது இதைப் பகிரங்கப்படுத்துவதில் அவர்களுக்குச் சற்றும் அனுகூலமில்லை. ஆகையால் இதைப்பற்றி யொரு பிரஸ்தாபமும் வெளிவாராது” என்றார்.

பிரபு:—“ஆ! தயவுசெய்து எப்படியாவது அவ்வாறு ஏற்பாடு செய்துவிடும். அவ்வாலிபனுக்கு இதுவிஷயத்தில் திருப்தி செய்வதற்காக இருநூறு முந்நூறு சவரன்கள் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறேன்” என்றார்.

இதைக்கேட்ட ஸர்தார், பிரபு விஷயத்தில் பின்னும் வெறுப்படைந்து “அவ்வாலிபன் அத்தகையவ னல்லவென்று நான் நம்புகிறேன்” என்றார். அவன் அப்படிப் பணத்திற்கு இச்சைவைத்து இந்த விஷயத்திற்கு உடன்படுவானென்று நான் கருதவேயில்லை. இக்கன்னிகை பூரண சுகமடையும் வரையில் என் வீட்டுக்காரியஸ்தி அவளுக்கு உபசாரம் செய்துகொண்டு இங்குதான் இருப்பாள். அதுகாறும் இந்தவீடு அவர்கள் சொந்த வாசஸ்தலமாய் பாவிக்கப் படவேண்டும்” என்றார்.

பிரபு ஸர்தாரை நோக்கி "எப்படியோ என் மானம் போகாமல் என்னைக் காப்பாற்றுவது உமது கடமை. ஆயினும் ஒரு விஷயமறிய விரும்புகிறேன். நண்பரே! இனி நமது நட்பின் சம்பந்தமாயிருந்த அன்பு தன் நிலைமையில் மாறுதலடையுமோ என்று அறிய விரும்புகிறேன்" என்றார்.

ஸர்:—"பிரபுவே! பிரபுவே! நான் மட்டும் பூரணமான பரிசுத்த நடக்கையுடையவனல்ல. ஆயினும் ஒருமனிதன் எத்தகைய அநீதச் செயல்களைச் செய்யலாம் என்பதற்கு ஒரு எல்லை யிருக்கிறது. நீரோ அளவுமீறி அந்த எல்லையைக் கடந்துபோய் விட்டீர். இனி நான் போய் வருகிறேன்" என்று கூறிவிட்டு விஸ்வநாதனை யழைத்துக்கொண்டு பிரபுவின் மாளிகையைவிட்டுப் புறப்பட்டார்.

---

79 - வது அத்தியாயம்

அமிர்தாம்பாளைச் சுகசிங்கம்பிரபுவின் மாளிகையில் விட்டு, கொலையாளியாகிய தானப்பன், பக்கிரி பொன்னன் முதலியவர்களைச் சற்று கவனிப்போம். இவர்களிருவரும் துப்பறியும் நமது சிங்கமாகிய செல்வநாதனைக் கொன்றுவிட வேண்டுமென்று தீர்மானித்து அதற்கு நீலாள் என்பவளை உடந்தையாய் வைத்துக்கொண்டு முயற்சிசெய்யத் தீர்மானித்திருப்பதைப்பற்றி முன்னமே கூறி யிருக்கிறோம்.

அவர்கள் சதியாலோசனையாவது நீலாளை யனுப்பி அவள் மூலமாய்ச் செல்வநாதனைத் தந்திரமாய்ச் சாடித்தீவிலிருக்கும் பக்கிரி பொன்னனுடைய இருட்டறைக்கு வரும்

படி செய்வதென்றும், அங்கு இத்துஷ்டர்களில் மூன்று நான்குபேர் அங்கு இருந்து அவனைக் கொன்றுவிடுவதென்றும், அதே சமயத்தில் தானப்பன் செல்வநாதன் வீட்டிற்குச் சென்று தந்திரமாய் அங்கிருக்கும் செல்வநாதனுடைய இரகசியமான புத்தகங்களை யெடுத்துக்கொண்டு வந்துவிடுவதென்றும் ஏற்பாடு செய்துகொண்டிருந்தார்கள். செல்வநாதனை மயக்கி இருட்டறைக்கு அழைத்துவர நீலாளை ஏற்படுத்தி யிருந்தாலும், ஜாலக்காரனை யவள்மேல் மோகூல் வைத்திருந்தார்கள். ஸர்தார் சூரியநாயகம் விஷயத்தில் அவள் இவர்களுக்குச் சூதுசெய்ததால் இவ்விஷயத்திலும் செய்வாளோ என்ற சந்தேகமே இக்கள்ளர்களுக் கிருந்தது.

ஸர்தாரின் மாளிகையில் தீப்பற்றி ஒருவாரமாயிற்று. இரவு நமது துப்பறியும் செல்வநாயகம் சுமார் 6-மணிக்கு தன் அறையில் உட்கார்ந்து ஏதோ ஒரு புத்தகத்தை வாசித்துக்கொண் டிருந்தான். அச்சமயம் அவன் அந்தரங்கம் யாவுமறிந்த வீட்டுக்காரியஸ்தி வந்து,

"யாரோ ஒரு மூதாட்டி வந்திருக்கிறுள்; பெயரைக் கூறமாட்டே னென்கிறுள். ஆனல் உன்னை யவசியம் உடனே கண்டு பேசவேண்டு மென்கிறுள்" என்று மொழிந்தாள்.

செல்வநாதனே யார் வந்தாலும் பேசமாட்டேனென்று கூறுகிற வழக்கமில்லை யாதலால் உடனே அம்மூதாட்டியை யுள்ளே யனுப்பும்படி கூறினன். சற்றுநேரத்திற்குள் கூன்வளைந்த பல்லில்லாத வயோதிகக் கிழவி யொருத்தி சற்று நடுக்கத்தோ டிருக்கும் சிரசோடு அவன் முன் வந்து நின்றுள்.

செல்வநாதன் அவளை யுற்றுநோக்கியதும் "ஆ! பாப்பம்மாள்" என்றுன். கிழவி புன்னகையோடு "ஆ! செல்வ

காதா? நீ யென்னை யறிந்து கொள்வாயென்று நான் அறிவேன்" என்றாள்.

செல்வநாதன்:—உன்னைக்காண மிக்க சந்தோஷமடைகிறேன். என்ன காரியமாய் வந்தாய்?

பாப்பம்மாள்:—நான் உனக்கு ஒரு உதவி செய்ய வந்தேன். மிக்க அவசியமான உதவி.

செல்வ:—ஆ! அப்படியானால் அதில் உனக்கும் அநுகூலம் இருக்கவேண்டும். இன்றேல் நீ இத்தகைய விஷயத்தில் பிரவேசிக்கமாட்டாய். இருக்கட்டும் இனி விஷயமென்ன கூறு பார்ப்போம்.

பாப்:—உன்னைப்பற்றி ஒரு சதியாலோசனை நடக்கிறது. நீ யதை யிப்போது அலட்சியமாய்க் கருதி பாராமுகம் செய்து விட்டால் பின்னால் கட்டாயம் துன்பமடைவாய்.

செல்வ:—நான் அடிக்கடி என்னைப்பற்றி சதியாலோசனைகளையே கேள்விப்படுகிறேன். ஆனால் அவைகளுக் கெல்லாம் எப்படியோ தப்பித்துக்கொண்டு தான் இருக்கிறேன்பார். ஆயினும் உண்மையான சங்கதி யேதேனுமிருந்தால் கூறு. அதோடு அதற்காக நீ யென்ன பரிசு எதிர் பார்க்கிறாய்? அதையும் கூறிவிடு.

பாப்:—எனக்குக் கொடுக்கும் பரிசைப்பற்றிய யோசனையை யுனக்கே விட்டு விடுகிறேன். 80 வயதாய்விட்ட என்னை வஞ்சனை செய்ய மாட்டாயென்று நானறிவேன். நான் கூறுவது உண்மை யென்று நீ தெரிந்து கொள்வதற்காக ஒன்று கூறுகிறேன், அதாவது அந்த நீலோன் பெண் உன்னிடம் மூன்று நான்குதரம் வந்தாளல்லவா?

செல்வ:—அது உண்மையே. அதைப்பற்றி யென்ன?

பாப்:—அவள் நடக்கை முழுமையும் வஞ்சகமான சூதே. எல்லா சதியாலோசனை யேற்பாடுகளும் தானப்பன், பக்கிரி பொன்னன், ஜாலக்காரன் இவர்களால் நடக்கிறது. இவர்களே மூலகாரணர்கள். உன்னை எப்படி யாவது தந்திரத்தால் மயக்கி இருட்டறைக்கு அழைத்து வருவதற்காக இவளை யேவியிருக்கிறார்கள்.

செல்வ:—ஆ! என் மனதிலென்னமோ சந்தேகம் இருந்து கொண்டே யிருந்தது, சரி; அப்புறம் நடந்த சங்கதியைக் கூறு.

பாப்:—"நான் யாவும் சவிஸ்தாரமாய்க் கூறிவிடுகிறேன். ஆனால் ஆரம்பமுதல் கூறுவதே நலம். ஒருநாள் கொலையாளியாகிய தானப்பன் இந்த வீட்டிற்கு வந்திருந்தான். அப்போது என்ன தந்திரத்தாலோ உன்னுடைய இரகசிய அறைகளுக்குள் நுழைந்து, அங்கு நீ வைத்திருக்கும் பலவித மாறுவேட மணியும் உடைகள் கருவிகள் முதலிய யாவற்றையும் பார்த்தான். அதனால் ஜாடித்தீவில் சாணைக்காரன் வேடமணிந்து வந்திருந்தது நீயே யென்று தெரிந்து கொண்டான். அது மட்டுமல்ல, அங்கிருந்த சிலபுத்தகங்களில் நீ எழுதி வைத்திருக்கும் குறிப்புகளை யெல்லாம் பார்த்தான். அதனால் தங்களைப் பற்றி நீ யெவ்வளவு தூரம் அறிந்துகொண் டிருக்கிறாய் என்பதை யுணர்ந்தான். இதனால் நீ யிருக்குமட்டும் எப்படி யாயினும் தங்கள் கூட்டத்திற்கு ஆபத்தேயென்று நன்றாய் அவர்களுக்கு விளங்கி விட்டது. ஆகையால் உன்னை யொழித்து விட்டாலன்றி இந்நாட்டிலிருப்பது பெரிய ஆபத்து

என்று தீர்மானித்துக் கொண்டார்கள். அதற்காகவே உன்னை மயக்கி இருட்டறையென்ற ஹோட்டலுக்குத் தனியாய் வரும்படி செய்வதற்காக இந்த நீலாளை யேவி யிருக்கிறார்கள்.......”என்றாள்.

செல்வநாதன் இம்மொழிகளைக் கேட்டதே யடைந்த வியப்பிற்கு அளவில்லை. இப்போது அவனுக்கு நீலாள் செய்கை முழுமையும் நன்கு விளங்கி விட்டது. ஆனால் மூதாட்டிக்குத் தன் வியப்பை வெளியிட லாகாதென்று சாமார்த்தியத்தோடு மௌனமாய் யாவும் கேட்டுக்கொண் டே யிருந்தான். அக்கிழவியோ எப்படி யிருந்தாலும் அவன் முகத்திலுண்டான ஒருவிதப் பிரகாசத்தால் அவன் மனோ நிலைமையை பொருவாறு உணர்ந்துகொண்டு அவனை நோக்கி,

“ஆகா! பார்த்தாயா எனக்கு உன் இரகசிய சங்கதிக ளில் எவ்வளவு தெரிந்திருக்கிறது. இப்போதுனக்கு நான் கூறும் சங்கதிகள் யாவும் உண்மையென்று நன்றாய் விளங் கும்” என்றாள்.

செல்வநாதனுக்குக் கள்ளரோடு மிக்க அனுபோக முண்டு. அவர்களுடைய சதியாலோசனைகளை யோராளமாய் உணர்ந்திருக்கிறான். பலதரம் தான் அவற்றில் சிக்கிக் கொண்டும் தப்பியிருக்கிறான். இந்த அநுபவங்களால் நீலாள் கூறும் விஷயங்களைத் தான் பூரணமாய் நம்புவதாகவும் அவள் கூறியபடியே செய்ய ஆயத்தமா யிருப்பதாகவுமே அவளிடம் அபிநயம் செய்தாலும் உள்ளத்தில் அவனுக்குப் பலமான சந்தேகம் மட்டும் இருந்தது. ஆதலால் இப்போது பாப்பம்மாள் கூறியவற்றைக் கேட்டதும் அவன் சந்தேகங் கள் உறுதிப்பட்டு விட்டன. அவன் அம்மூதாட்டியை நோக்கி,

"சரி, இப்போது நீ கூறும் சங்கதிகள் யாவும் மெய்யே யென்று எனக்குத் தெரிகிறது. இதோ இந்தப் பத்து சவ ரன்களையும் முன்பணமாய் எடுத்துக்கொள்" என்ற உடனே தன் கைப்பெட்டியைத் திறந்து இருபது பவுன்களை யெடு த்து வந்து பத்துபவுன்களை யம்மூதாட்டியிட மளித்து விட்டு மீதி பத்துபவுன்களை மேஜையில் வைத்துவிட்டு அம்மூதாட்டியை நோக்கி,

" இப்போது நீ இரண்டு விஷயங்களைப்பற்றி மட்டும் கூறவேண்டும். அவை எவையெனில், முதலாவது இந்த இரகசிய சங்கதியாகிய அக்கள்ளரின் சதியாலோசனை யுனக்கு எப்படித்தெரிந்தது? இரண்டாவது,யாவும் அறிந்த பின் நீ என்ன காரணத்திற்காக அவர்களுக்குத் துரோகம் செய்யத் துணிந்தாய்? இந்த இரண்டு சங்கதிகளை மட்டும் கூறிவிட்டு இதோ யிந்த இரண்டாவது பத்து 'சவரன்களை யும் எடுத்துக்கொள்" என்று கூறினான்.

இத்தகைய விஷயங்களில் அக்கிழவி நல்லபணம் சம் பாதித்து நெடுநாளாய் விட்டது. ஆகையால் இருபது பவுன் சிக்குவதை யறிந்ததும் அவள் மிக்க சந்தோஷ மடைந்து செல்வநாதனை நோக்கிப் பின்வருமாறு கூறத்தொடங்கி னாள்:—

"யாவும் விவரமாகவும் உண்மையாகவும் கூறிவிடுகி கிறேன். நீலாள் என்ற பெண் எப்போதும் என்னை அலட் சியமாய் நடத்தி வருகிறாள். எப்போதும் வெறுப்பாகவே என்னிடம் பேசுவதும் நடப்பதுமா யிருக்கிறாள். என்னை இகழ்ச்சியாய்ப் பேசுவது, கேலிசெய்வது, ஏண்டி கூன் கிழவி யென்கிறது, நீ கைதேர்ந்த கிழவேசி என்கிறது என்று இம்மாதிரி எப்போதும் என்மனம் நோகும்படி

பேசுகிறதுமாயிருக்கிருள். நெடுநாள் மெய்யாகவே என்னைப் புகழ்ந்து பேசுகிறவள்போல கேலியாய்ப் பேசிவிட்டுக் கடைசியில் ஒரு இரண்டணுவை யெடுத்து எனக்குப் பரிசாயளிப்பவள்போல் என்னை யருகி லழைத்து நான் கையை நீட்டும்போது அந்த இரண்டணுவை தூரத்தில் எறிந்துவிட்டு "எடுத்துக்கொள்" என்று கூறிக் கலகலவென்று நகைத்தாள். வேசிப்பெண் என்னுல் எவ்வளவோ நன்மைகளை யனுபவித்து என் உதவிகளை யெவ்வளவோ பெற்றுப் பிறகு சற்றேனும் நன்றியின்றி என்னை இம்மாதிரி நடத்துகிருள். இன்றேல் நான் இம்மாதிரி வஞ்சம் தீர்த்துக் கொள்ளச் சற்றுவது துணியமாட்டேன். என்மனம் அப்படிப்பட்ட கல்மனமல்ல. அவள்தான் அப்படி யென்ருல், அக்கொலை பாதகனுகிய தானப்பனே, அவனும் என்னை மிக்க அலட்சியமாகவே நடத்துகிருன். இதனுல் சமயம் வந்தால் இவர்கள்மேல் வஞ்சம் தீர்த்துக் கொள்ளவேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டேன்.

இதனுல் தானப்பன் நீலாளிடம் ஏதோ இரகசிய சங்கதி பேசச் சமயம் பார்த்துகொண்டிருக்கிருன் என்பதை யறிந்ததே அவர்கள் இருவரும் இரகசியமாய்ப் பேசும்போது நான் கதவின் சாவித்துளையில் செவிகொடுத்துக் கேட்டேன். அதுமுதல் கடந்த மூன்று வாரங்களாக சமயம் நேரிடும்போதெல்லாம் அவர்கள் சம்பாஷணையை யொத்துக் கேட்கத் தொடங்கினேன். நற்காலமாய் என் வேலைக்கு எவ்வித இடைஞ்சலும் நேரிடவில்லை.

இவர்கள் அப்போதைக் கப்போது பேசும் சங்கதிகளைக் கேட்டதால் அவர்கள் உன்னை யொழித்துவிடக் கருதுகிருர்களென்று தெரிந்துகொண்டதோடு அவர்கள் சதியாலோசனை விருத்தி யடைந்துகொண்டே யிருக்கிறதென்றும்

தெரிந்துகொண்டேன். நான் இந்த வேலையில் பிரவேசித்திருக்கிறேன் என்று அவர்கள் சற்றும் சந்தேகிக்கவில்லை. பிறகு இந்த நீலாள் உன்னை மயக்கி யழைத்துவர ஏற்படுத்தப்பட்டிருக்கிறாள் என்றும் தெரிந்துகொண்டேன். அவள் உன்னிடம் நாலைந்து தரம் வந்திருந்தாளென்றும் தெரிந்துகொண்டேன். நீ பூரணமாய் அவள் சூட்சிகளால் மயங்கி அவள் யோசனைப்படி நடக்கச் சித்தமாயிருக்கிறாயென்று அவள் நம்பிக்கொண் டிருக்கிறாள். இப்போது உன்னிடம் வரப்போகிறாள். அதை யறிந்தே நான் முன்னாடியாய் இதை யுனக்குக் கூறிவிடவந்தேன். அவர்கள்மேல் வஞ்சம் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்ற ஒரு எண்ணமே இப்படிச் செய்யும்படி என்னைத் தூண்டியது" என்று மிக்க கோபத்தோடு கூறினாள்.

செல்வ:—"நீ கூறுவது உண்மையே யென்று தெரிந்துகொண்டேன்" என்றான்.

பாப்:—நான் வேண்டுமாயின் இன்னும் சில இரகசியங்களைக்கூட கூறுவேன். ஆனால் உனக்கொன்று கூறுகிறேன். அதாவது இச்சங்கதிகளை நான் கூறியதாய்க் கொஞ்சங்கூட வெளியிடவேண்டாம்.

செல்வ:—அது நமக்குள் தீர்மானமான ஒப்பந்தமே. அப்புறம் கூறு.

பாப்:—ஸர்தார் சூரியநாயகம் மாளிகையில் தீப்பற்றியது இத்துஷ்டர்களுடைய செய்கையே. ஆ! அந்தத் தானப்பன் என்னைத் தான் ஒருநாளைக்குத் தூக்கிற் போடுவதாய்க் கூறினான். இக்கள்ளப் பயல்களின் சங்கதிகளெல்லாம் எனக்குத் தெரியும். ஆகையால் இவன் தூக்குமரத்தில் தொங்குவதைப் பார்த்தபின்பே நான் சாவேன்.

செல்வ:—இச்சங்கதி எப்படி நடந்தது. உனக்கெப்படி தெரியும்.

பாப்:—"ஏன், அவர்கள் சம்பாஷணையால் தான் தெரிந்தது இக்கள்ளர்கள் ஸர்தாரின் மாளிகைக்குப் பின்பக்க மிருக்கும் கட்டிடத்தில் நுழைந்து கொள்ளையடிக்கச் சென்றார்கள். தற்செயலாய் இவர்கள் கையிலிருந்த இராந்தல் கீழே விழுந்து வைக்கோல் பற்றிக்கொண்டு வீட்டிற்கே மோசம் வந்தது. அதன்மேல் இவர்கள் ஓடிவந்து விட்டார்கள். நான் இன்னொருவேளை யாவும் கூறுகிறேன். இப்போது நான் போய்விடவேண்டும் அந்த நீலாப்பெண் இங்கு வரப்போகிறாள்" என்று கூறிவிட்டு விடை பெற்றுக்கொண்டு சென்றாள்.

அவள் சென்ற சுமார் அரைமணிநேரங் கழித்து நீலாள் செல்வநாதனிடம் வந்தாள். வீட்டுக்காரியஸ்தியா கிய மூதாட்டி யவளை யவனிடம் விட்டுவிட்டு கதவைமூடிக் கொண்டு சென்றதே, செல்வநாதனை நோக்கி,

நீலாள்:—"அந்த விவகாரம் இந்த இரவே நடக்கப் போகிறது" என்றாள்.

செல்வநாதன் ஏதோ அவள் சூட்சிக்குப் பூரணமாய் இசைந்துவிட்டவன்போல் "இன்றைக்குத்தானா? விவகாரம் எங்கே நடக்கப்போகிறது?" என்றான். நீலாள் அவன் உள் ளத்திலிருக்கும் கருத்தையறிய மிக்க சாமர்த்தியத்தோடு அவனைப் பக்குவமாய் உற்று நோக்கிக்கொண்டே,

"ஏன்! அங்குதான் பக்கிரி பொன்னனுடைய இருட் டறையில்" என்றாள்.

செல்வ:—இப்போது நம்மிருவரில் ஒருவரும் தப்பர்த்தம் செய்துக்கொள்ளாம லிருக்க, இருவர் கருத்துகளையும்

ஒருவருக்கொருவர் நன்கு யறிந்து கொள்வோம். நீ கூறியபடி தானப்பனும் அவன் கூட்டாளிகளும் ஒரு பெரிய சதியாலோசனை செய்துகொண்டிருக்கிறார்கள். அது மிக்க விபரீதமான யோசனை. அந்த யோசனையில் உன்னை யவர்கள் சேர்க்கவில்லை. அதைப்பற்றி முடிவான ஆலோசனை யிந்த இரவு நடக்கப்போகிறது. அல்லவா?''

நீலாள்:—ஆம் விவகாரம் நீர் சொன்ன நிலைமையில் தான் இருக்கிறது.

செல்வ:—சரி. இப்போது நீ முதலிலிருந்து கூறிய சங்கதிகளை யெல்லாம் வரிசையாய் இன்னொருமுறை கூறிவிட வேண்டும். ஏனெனில் என் மனதில் பலவிவகாரங்கள் கலவரித்துக்கொண் டிருக்கின்றன. ஆகையால் நீ கூறிய விஷயங்கள் யாவும் என் மனதில் சரியாய் நிலைத்திருக்க மாட்டா.

நீலாள்:—அப்படி யாயின் மறுபடி யாவற்றையும் சுருக்கமாய்க் கூறிவிடுகிறேன். அந்த இருட்டறையின் பின் பக்கம் ஒரு தாழ்வாரம் இருக்கிறது. அது வீதியின் பின்பக்க மிருக்கும் அகழியைப் பார்த்தபடி யிருக்கிறது. இவ்விஷயம் உனக்குத் தெரிந்ததே.

செல்வ:—ஆம் ஆம். முன்பு நீ வந்து யாவும் கூறிவிட்டுச் சென்ற பின்பு நான் ஜாடித் தீவிற்குச்சென்று எல்லா விடங்களையும் நன்றாய்ச் சோதித்துப் பார்த்தேன்.

நீலாள்:—நீ யாவும் பார்த்திருக்கிறாய். ஆகையால் இப்போது நான் கூறுவதை நன்றாய் அறிந்து கொள்வாய். அதாவது அங்கிருக்கும் மரப்பாலத்தின் மேலேறி தாழ்வாரத்திற்குள் நுழைந்து விடலாம். அங்கு சேர்ந்

ததே அங்குள்ள சாளரத்தில் நின்றுகொண்டு அடுத்த அறையில் நடக்கும் எல்லா சங்கதிகளையும் நன்றாய்க் கேட்கலாம்.

செல்வ:—"சரி நீ கூறுவது சரிதான்" என்றான்.

நீலாள் மிக்க சாக்கிரதையோடு அவன் மனதில் எள்ளளவு சந்தேகமாவது இருக்கிறதாவென்று உன்னிப்பாய்ப் பார்த்துக் கொண்டேயிருந்தாள். ஆனால் செல்வநாதனோ கொஞ்சமாவது தன் சந்தேகத்தைக் காட்டாமல் அவள் வார்த்தைகளில் பூரண நம்பிக்கை வைத்து அவள் யோசனையின்படி நடக்க ஆயத்தமாய் இருப்பவன்போலவே நடித்தான். நீலாள் அவன் உட்கருத்தைச் சற்றேனுமறிய முடியவில்லை. ஆதலால் "இவன் நமது தந்திர வலையிற் பூரணமாய்ச் சிக்கிக் கொண்டான். நாம் கூறுகிறபடியே செய்ய மனப்பூர்வமாகவே ஒப்பியிருக்கிறான்" என்று நம்பிக் கொண்டாள்.

நீலாள்:—இவ்வளவே சங்கதி. நான் கூறியபடி அவர்கள் மேல் வஞ்சம் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்பதே என் நோக்கம். எனக்கு வேறு பரிசு வேண்டுமென்ற அக்கறை யில்லை.

செல்வ:—நீ யோசித்த தந்திரம் புத்திசாலித் தனமானதே. இருக்கட்டும், அங்கு எத்தனைபேர் கூடுவார்கள்?

நீலாள்:—ஏன்! அதிகமான பேரே யிருப்பார்கள். அக் கூட்டத்தில் பிரதானமான ஆட்களெல்லா மிருப்பார்கள். அதனாற்றான் அவர்கள் ஏதோ பிரமாதமான யோசனை செய்கிறார்கள் என்று நான் கூறுவது.

செல்வ:—ஜாலக்காரன் இப்போது உனக்கு மிக்க வேண்டியவனா யிருக்கிறானே. தந்திரமாய் அவனிடத்திலிருந்

தாவது இந்த இரகசியத்தைக் கொஞ்சம் அறிந்து கொள்ள உன்னால் முடியாமற் போய் விட்டதா?

நீலாள்:—அப்பா! அவனா! அவன் இத்தகைய விஷயத்தில் வாய்க்குப் பூட்டிட்டவன் மாதிரியே. அவன் நன்றாய்க் குடித்திருக்கும்போது பலதரம் என் சாமர்த்திய மெல்லாம் காட்டிப் பார்த்தேன். ஒன்றுமே முடியவில்லை. அப்படி யவனை யதிகமாய்த் தொந்திரை செய்தால் என்மேல் சந்தேகப் படுவதோடு பொய்க்கதை யேதாவது கட்டிக் கூறிவிடுவான். ஒன்று மட்டும் எனக்கு நிச்சயமாய்த் தெரியும். அதாவது இப்போது அவர்கள் என்ன ஆலோசனை செய்வதாயினும் அதில் கொலைசெய்யும் வேலையடங்கி யிருக்கிறது.

செல்வ:—ஆ! அப்படியா சங்கதி. அதை யெப்படி நீ யறிந்து கொண்டாயோ?

நீலாள்:—"எப்படி யெனில் காலையில் தானப்பன் தன் கைத் துப்பாக்கிகளைச் சுத்தம் செய்துகொண்டான். நான் உன்னிப்பாய்ப் பார்த்ததை யவன் கவனிக்கவில்லை. பிறகு பொன்னனும் தன் துப்பாக்கிகளையும் பெரிய மடிப்புக் கத்தியையும் சுத்தம் செய்ததோடு கத்தியை நன்றாய்த் தீட்டினான். அதுமட்டுமல்ல. இன்றிரவு நமக்கு நல்ல வேட்டை கிடைக்கும் என்று அவர்கள் பேசிக்கொண்டார்கள்" என்றாள்.

தான் மிக்க சுலபமாய் அவள் ஏற்பாட்டிற்கு ஒத்துக் கொண்டதாய்த் தோன்ற லாகாதென்று கருதி செல்வநாதன் அவளை நோக்கி.

"நீ அத்தாழ்வாரத்திலுள்ள சாளரத்தில் பதுங்கியிருந்து அவர்கள் சம்பாஷணையை யறிந்துகொள்ளக் கூடாதா?" என்று வினவினன்.

நீலாள்:—என்னுல் கூடுமானுல் நான் கட்டாயம் செய்வேன். ஆனுல் முடியாது. இப்போது நான் துரிதமாய் என்வீடுபோய்ச் சேர்ந்து விடவேண்டும். மறுபடி இன்றிரவு நான் வெளியில் தலை காட்டக்கூடாது. இத்தகைய வேலைக்கு நீயே தகுதி. நீ சூக்குமமாய் விஷயங்களை யறிந்து கொள்கிற மாதிரி நான் அறிந்து கொள்ள முடியுமா? என்னுல் செய்யத்தக்க காரியங்களை மட்டுமே நான் செய்யக் கூடும். இன்றேல் அடியோடு மோசமாய்விடும். என்மேல் சந்தேகமுண்டாகி என் உயிருக்கே கெடுதி நேரிடும்.

செல்வ:—சரி. நான் இன்னும் உனக்கு நான் கொடுக்க வேண்டிய பரிசில் கொஞ்சம் பாகமாவது தரவில்லையே.

நீலாள்:—"நான் இதைச் செய்வதே என் வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ளவென்று முதலிலேயே கூறினேன். காரியம் பூரணமாய் நிறைவேறிய பிறகு நீ கொடுக்கும் பரிசை வாங்கிக் கொள்வேன்" என்ருள்.

செல்வ:—ஆகா! தடையின்றி நீ பூரணமாய் வஞ்சம் தீர்த்துக்கொள்ளச் சமயம் வாய்ந்திருக்கிறது. இராத்திரிக்கு அவர்கள் என்ன சதியாலோசனைகள் செய்தாலும் கடைசியில் அவர்களெல்லாம் தூக்குமரத்தில் தொங்குவார்கள் என்பதுமட்டு முண்மை. அவர்கள் எங்கோத்திற்கு அங்கு கூடுவார்கள்?

நீலாள்:—அவர்கள் சரியாய்ப் பதினேருமணிக்குக் கூடுவார்கள். அந்தவேளைக்கு நீ அவர்கள் கூடும் அறையின்

பின்னுள்ள தாழ்வாரத்தில் இருந்தால் காரியம் நிறைவேறி விடும்.

செல்வ:—அப்படியாயின் அந்தத் தாழ்வாரத்திற்குத் திடீலென்று யாராவது வந்து எனக்கு அதனுல் ஆபத்து நேரிடாதென்று நீ பூரணமாய் நம்புகிறு யல்லவா?

நீலாள்:—"ஆம். உனக்கு எள்ளளவு கெடுதியும் நேரிடாது" என்ருள். அதன்மேல் நீலாள் விடைபெற்றுக்கொண்டு சென்ருள்.

அவள் சென்றதே செல்வநாதன் "ஆ! இச்சதியாலோசனை மிக்க கொடியதே. ஆயினும் பாப்பம்மாள் எனக்கு எச்சரிக்கை செய்திரா விட்டாலும் நான் இதில் நம்பிக்கை யென்னமோ வைக்கமாட்டேன். இந்த நீலாள் தன் பங்கு வேலையை மிகச் சாமார்த்திய மாகவும் தந்திர மாகவும் செய்திருக்கிருள். ஆயினும் கடைசியில் நான் அவர்களுக்குச் சரியான புத்தி புகட்டுவதை யறிந்ததே யாவரும் விலவிலத்து விடுவார்கள்" என்று தனக்குள்தானே கூறிக் கொண்டான்.

இரவு ஒன்பதரை மணிக்குச் செல்வநாதன் தன் வீட்டில் சில ஏற்பாடுகளைச் செய்துவிட்டுத் தன் சாதாரண உடையை யணிந்துகொண்டு, தன் கைத்துப்பாக்கிகள். இரண்டையும் சரியாய்க்கெட்டித்து சேபிகளில் வைத்துக் கொண்டு வீட்டை விட்டுப் புறப்பட்டான்.

இதற்கிடையில் தானப்பன், ஜாலக்காரன், குடைக்காரன், பொன்னன், ஹீரோஜி என்ற பிச்சைக்காரன் யாவரும் ஜாடித்தீவிலுள்ள இருட்டறையில் கூட்டம் கூடினுர்கள். அவர்கள் எதிரில் ஒரு மேஜைமேல் குடிவகைகளும் பலவகைச் சிற்றுண்டிகளும் வைக்கப்பட்டிருந்தன. அவ

ரவர்கள் பிரியப்படி குடித்துக்கொண்டும் தின்றுகொண்டும் பேசிக்கொண்டு மிருந்தார்கள்.

பக்கிரி பொன்னன் ஜாலக்காரனை நோக்கி, "நீ யின்னும் உன் ஆசாமி இவ்விஷயத்தில் உண்மையாகவே நடக்கிறுளென்று நம்பிக்கொண்டிருக்கிறுயா?" என்று வினவினுன்.

ஜாலக்காரன்:—இதுவரையில் சந்தேகப்பட எனக்குத் தக்க காரணம் சிக்கவில்லை. ஆயினும் அவள் இதுகாறும் நடந்து கொண்ட சூதான விஷயங்களை நினைக்க ஒன்றும் சொல்லக் கூடவில்லை. ஆச்சு, அவள் திரும்பிவர வேண்டிய காலமாய் விட்டது. வந்து என்னதான் கூறுகிறுள் பார்ப்போம்.

பக்கிரி போன்னன்:—அவள் இவ்விஷயத்தில் நமக்குத் துரோகம் செய்வதாயின் நாம் எப்படி யதை யறிந்து கொள்வது?

தானப்பன்:—"இப்போதும் நாம் செய்யப்போகும் விஷயமாக அவள் நம்மைச் செல்வநாதனிடம் காட்டிக் கொடுக்க ஒருவழியுமில்லை. இதில் அவள் செய்யக் கூடியதெல்லாம் என்னவெனில், நமது யோசனையை யவனுக்குக்கூறி அவனை யெச்சரிக்கைசெய்து விடலாம். அதனுல் அவன் இங்கு வாராமல் நின்று விடுவான்" என்றுன்.

அச்சமயம் யாரோ தெருக்கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. பொன்னன் உடனே சென்று கதவைத் திறந்தான். நீலாள் உள்ளே வந்தாள். இச்சமயம் சற்றும் சூதின்றி உண்மையாய் நடந்துகொண்டபடியால் அவள் முகத்தில் எள்ளளவு கலவரமாவது இல்லை. அவள் உள்ளே வந்து ஜாலக்காரன் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு, "எல்

லாம் பூரண திருப்தியாகவே நடந்தேறுகிறது. மூன்று வாரமாக என் தந்திரமான மொழிகளைக் கேட்ட அவன் கடைசியில் நான் வீசிய தூண்டில் ஆகாரத்தைப் பூரணமாய் விழுங்கி விட்டான். இரவு பதினேரு மணிக்குக் கட்டாயம் நான் குறித்த விடத்தில் வந்திருப்பான்'' என்றுள்.

தானப்:—அப்படியாயின் அவன் சற்றும் சந்தேகப்படவில்லையே?

நீலாள்:—எள்ளளவு மில்லையென்றே பூரணமாய் நம்புறேன். அப்படி யவன் சந்தேகப்பட்டால் தன் மனோ பாவத்தை மறைத்து வைத்துக்கொள்வதில் அவனை விட சாமர்த்தியவான் உலகில் யாருமில்லையென்றே கூறுவேன்.

ஜாலக்காரன்:—அவன் அப்படிப்பட்டவனே யென்பதிற் றடையேயில்லை. ஆயினும் நீ யுன் சாமர்த்தியத்தால் அவனை ஜெயித்து விடுவாயென்று நம்பினேன்.

நீலாள்:—"நான் மறுபடி கூறுகிறேன். இதில் என் மனச்சாட்சிக்குச் சற்றும் விரோதமின்றி உண்மையாய்ப் பாடுபட்டேன். என் மொழிகளனைத்தும் அவன் பூரணமாய்ச் சத்தியமென்றே நம்பிக்கொண்டிருக்கிறுன் என்றே நான் கடவுளறிய மனப்பூர்வமாய் நம்புகிறேன். அன்று ஸர்தார் சூரியநாயகம் விஷயமாய் நான் சூது செய்ததிலிருந்து நீங்கள் என்மேல் அவநம்பகம் வைத்திருக்கிறீர்களென்று தெரிகிறது. நான் கூறுகிறேன். அது பெருந்தவறு. ஸர்தார் என் முதற் காதலன். ஆகையால் அவருக்கு ஆபத்து நேர்வதாயின் நான் தடுக்காம லிருக்க முடியாது. மறுபடி பலதரம் அத்தகைய சம்பவம் நேர்ந்தாலும் நான் அப்

படியேதான் நடந்துகொள்வேன். ஆனல் மற்றபடி வேறெக்காரணத்திற்கும் உங்களுக்குத் துரோகம் செய்யவாவது, உங்களைக் காட்டிக்கொடுக்கவாவது நினைக்கவே மாட்டேனென்று கடவுளறியச் சத்தியம் செய்வேன்" என்று கோபத்தோடு எதிரிலிருக்கும் மேஜைமேலிருந்த புட்டிகள் தட்டுகள் பாத்திரங்கள் யாவும் அதிர்ந்து விடும்படி ஓங்கிக் குத்தினள்.

ஜாலக்:—நீலாள் கோபிக்காதே. இப்போது உன்மேல் யாருக்கும் அவநம்பகம் கிடையாது. இந்த விவகாரத்தில் மட்டும் நீ யுண்மையாய் நடந்தால் முன் நடந்த சங்கதி யடியோடு மறக்கப்படும் என்று நான் முன்னமே கூறியிருக்க வில்லையா.

நீலாள்:—இதில் நான் உண்மையாகவே நடந்துகொண்டேனென்று கட்டாயம் அறிந்து கொள்வீர்கள். இனி நான் இங்கு தாமதிக்க வேண்டிய அவசியமில்லையே?

ஜாலக்:—"இல்லை. நீ யுடனே பாப்பம்மாள் வீட்டிற்குச் சென்று நிம்மதியாய் நித்திரை செய்யலாம். ஆயினும் கொஞ்சம் பானம் அருந்திச் செல்" என்று ஒரு கிண்ணத்தில் சாராயம் விட்டளித்தான்.

நீலாள் சென்றதே ஜாலக்காரன் தானப்பனை நோக்கி "அவள் கருத்தின் உண்மை யெனக்கு இன்னும் புலப்படவில்லை" என்றான்.

போன்:—அவள் மன ஆழத்தைக் கண்டறிவது அசாத்தியம். ஆ! அவள் மட்டும் இவ்விஷயத்தில் நமக்குச் சூது செய்தாலோ.........

குடைக்காரன்:—ஆ! அவள் கட்டாயம் செய்பவளே.

தானப்:—ஆ! அவள் மட்டும் அப்படிச் செய்தால் அதோடு அவளை யொழித்து விட வேண்டியதே. அப்புறம் ஒரு யோசனையும் செய்ய லாகாது.

ஜாலக்:—"நானே யவள் வேலையை முடித்து விடுவேன். ஒருவர் துணையும் எனக்கு வேண்டாம்" என்றான்.

தானப்பன் உடனே எழுந்து நின்று,

"சரி அந்த உண்மை யெப்படியும் கொஞ்சநேரத்தில் தெரிந்துவிடப் போகிறது. நான் இனி புறப்பட்டுச் செல்வ நாதன் வீட்டிற்குச் செல்கிறேன். நான் திரும்பி வரும் போது இங்கு செல்வநாதன் வேலை பூராய் முடிந்துவிட் டிருக்குமென்று நம்புகிறேன்.

தானப்பன் சென்றபின் மற்றபேர் உட்கார்ந்து குடித் துக்கொண்டும் சுருட்டு பிடித்துக் கொண்டு மிருந்தார்கள். பக்கிரி பொன்னன் இரண்டு மூன்றுதரம் வெளியிற்சென்று வானத்தைப் பார்த்துவிட்டுத் திரும்பிவந்து "நிலவு பிரகாச மாய்ப் புறப்பட்டு வந்துகொண்டிருக்கிறது" என்றான். இது யாவர்க்கும் அதிருப்தியா யிருந்தது. ஏனெனில் அவர்கள் வேலைக்கு இருட்டாயிருந்தால் தான் அநுகூலம். அங்கு அதிக ஜன சந்தடியில்லா விடினும் தங்கள் வேலை, கொலை பாதகவேலை யாதலால் அக்கம் பக்கத்தில் கொஞ்சம் சந்தேக முண்டாயின் பெருமோசமாகுமென்று அவர்க ளுக்குத் தெரியும். எப்படி யாயினும் காரியத்தை முடித்தே தீரவேண்டு மென்பது அவள் துணிகரம்.

பக்கிரி பொன்னன் தன் கடியாரத்தை அப்போதைக் கப்போது பார்த்துக் கொண்டே யிருந்து, கடைசியில் மணி பதினொன்றாயிற்று என்றான். ஜாலக்காரன் ஆயினும் நாம் இன்னும் கால்மணி நேரம் பொறுத்துக்கொண்டிருந்து

பிறகு பின்பக்கம் செல்வநாதன் வந்து பதுங்கி யிருக்கும் இடத்திற்குப் பாய்வது நலம் என்றான். பொன்னன் மிக்க சந்தோஷத்தோடு "ஆ! இன்றோடு நமது பயமனைத்து மடியோடு ஒழிந்துவிடும். இனி நாம் எவனுக்கும் அஞ்சவேண்டியதே யில்லை" என்றான்.

ஜாலக்:—"செல்வநாதன் இன்னும் கொஞ்சநேரத்தில் தன் முன்னோர்களிடம் போய்ச் சேர்ந்து விடுவான். நம்மைப் பிடித்த பெருஞ்சனியன் அடியோடு ஒழிந்துவிடும்" என்றான்.

பொன்:—"சற்று நேரத்திற்குள் அவன் நிம்மதியாய் அகழியின் அடியில் மறுபடி யெழுந்திருக்காத பெருந்தூக்கம் தூங்குவான்" என்று மிக்க ஆனந்தத்தோடு நகைத்துக் கொண்டே கூறினான்.

அச்சமயம் வீதியின் கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. பக்கிரி பொன்னன் திடுக்கிட்டு "அது யாராயிருக்கும்? ஒருவேளை கிழநரியோ? அல்லது கடல் வியாபாரியாகிய சொக்கனோ? இந்த சமயத்தில் தானா இவர்கள் வரவேண்டும். என்ன வேலையாய் வருகிறார்களோ தெரியவில்லையே" என்றான்.

ஜாலக்:—"சரி. அவன் யாரா யிருந்தாலும் இருக்கட்டும். இ[illegible] இரகசியத்தில் ஒருவனையும் சேர்க்கக் கூடாது. அவன் எவனாயிருப்பினும் நமக்கு ஏதோ இரகசிய விஷயம் பேசவேண்டி யிருக்கிற தென்றும், இச்சமயம் அது யாருக்கும் தெரிய லாகாதென்றும் அது ஒரு முடிவிற்கு வந்தபின் நண்பர்கட் கெல்லாம் கூறப்படுமென்றும் சமாதானமாய்க்கூறி யவனை யனுப்பிவிடு" என்றான்.

பக்கிரி பொன்னன்:—"அடா! எனக்கு அதைப்பற்றி இவ்வளவு பிரசங்கம் செய்ய வேண்டுமோ? அவனுக்கொரு சாக்குகூறி யனுப்பி விடவா எனக்கொருவர் கற்றுக் கொடுக்க வேண்டும். பேஷ்! வெகு நேர்த்தி" என்று சற்று கோபத்தோடேயே யெழுந்து சென்று தெருவாசற்படி கதவைத் திறந்தான்.

நேயர்களே அங்கு அவன் கண்ட காட்சியைக் கேட்டால் நீங்களே திடுக்கிடுவீர்களெனின் அவன் மனம் எவ்வாறிருந்திருக்கும் என்று சற்று சிந்தித்துப்பாருங்கள். உண்மையில் அவன் அப்படியே பிரமித்துச் சற்றுநேரம் ஒரு மரம்போல் அசைவற்று நின்று விட்டான். ஏனெனில் அவன் கதவைத் திறந்ததும் சாதாரண உடையணிந்து கொண்டு நிம்மதியான மனதோடு சாதாரணமாய்க் கறுப்பறையைப் பார்வையிட்டுச் செல்ல சற்றும் களங்கமின்றி வந்தவன்போல் நமது துப்பறியும் சிங்கமாகிய செல்வநாதன் தன் எதிரில் நிற்பதைக் கண்டான்.

80-வது அத்தியாயம்

தன் கையில் இருந்த இராந்தல் வெளிச்சத்தில் செல்வநாதன் முகத்தைக் கண்டதே பக்கிரி பொன்னனுக்குண்டான வியப்பும் திகிலும் கலவரமும் இவ்வளவென்று சொல்லமுடியாது. சற்றுநேரம் அவன் அடியோடு அறிவு மயங்கி திகைத்து நின்றான்.

செல்வநாதன் அவன் முகக்குறிபால் அவனுடைய மனோநிலைமையை யறிந்துகொண்டானெனினும் ஒன்று மறி

யாதவன் போலும் சற்றும் களங்கமில்லாத மனமுடைய வன்போலும் பொன்னனை நோக்கி,

"ஆ பொன்னப்பா! நான் உன்னிடம் இரண்டொரு வார்த்தைகள் பேசவேண்டுமென்று இரண்டு மூன்று நாட்களாய்க் கருதி யிருந்தேன். இன்று இந்தப்பக்கம் வரவேண்டிய வேலை யிருந்ததால் இதுவும் நல்ல சமயமேயென்று உன்னைக் காணவந்தேன்" என்று கூறிக்கொண்டே பொன்னனுடைய மறுமொழிக்கு எதிர்பாராமல் உள்ளே நுழைந்து நேராய் வீட்டின் பின்பக்கமிருக்கும் இருட்டறைக்குச் சென்றான்.

பக்கிரி பொன்னன் இன்னது கூறுவதென்று தெரியாமல் துரிதமாய்க் கதவை மூடிக்கொண்டு செல்வநாதனைப் பின் தொடர்ந்து சென்றான். அந்த வெளிச்சத்தால் இருட்டறையில் இருந்த ஜாலக்காரன், குடைக்காரன், ஹீரோ என்ற மூவரும் பக்கிரி பொன்னன் கூட வருகிறவன் செல்வநாதன் என்று கண்டார்கள்.

தாங்கள் கொலைசெய்யத் தீர்மானித்து ஆயத்தமாய் எதிர்பார்த்துக்கொண் டிருக்கும் அதே மனிதன் தங்கள் முன் மனோநிம்மதியோடு வருவதைக்கண்டதே அவர்கள் திப்பிரமை யடைந்து மெய்மறந்து விட்டார்கள்.

செல்வநாதன் அங்கிருந்த ஒரு நாற்காலிமேல் உட்கார்ந்துகொண்டு தன் இருகரங்களையும் இரண்டு ஜேபிகளில் நுழைத்துக்கொண்டு, நாற்புறமும் பார்த்து,

"சரி, இங்கு யாரும் புதுமனிதரில்லை. யாவரும் நமக்கு அறிமுகமானவர்களே. உங்கள் ஒவ்வொருவரோடும் நான் பழகி யிருக்கிறேன்" என்றான்.

கள்ளர்கள் இன்ன சங்கதியென் றுணராதவர்களாய் "இதென்ன சங்கதியோ தெரியவில்லையே" என்று திகிலும் கலவரமுமடைந்து ஒருவரை யொருவர் பார்த்து விழித்தார்கள்.

செல்வநாதன் தன் பின்பக்கமாய் ஒருவரும் வராதபடி நாற்காலியைச் சுவர் ஓரமாய்த் தள்ளிக்கொண்டு உட்கார்ந்து, கள்ளர்களை நோக்கி,

"ஆ! நீங்கள் எவ்வளவோ கஷ்டப்பட்டு செய்த சதியாலோசனை, அதிலும் தானப்பன் சேர்ந்து செய்த யோசனை, என்னை வஞ்சித்து இங்கு வரச்செய்து கொலை செய்ய நினைத்ததைவிட, வேறு ஏதாவது நல்ல யோசனை செய்திருந்தால் எவ்வளவு நன்று யிருந்திருக்குமென்று இப்போது உங்கள் மனதிற் படும் என்று நம்புகிறேன்" என்றான்.

இதைக் கேட்டதே தங்கள் சதியாலோசனை யனைத்தும் செல்வநாதனுக்குத் தெரிந்து விட்டதென்று கள்ளர்கள் அறிந்து கொண்டார்கள். ஒருவன் "ஓகோகோ! அடியோடு காட்டிக் கொடுக்கப் பட்டோம்" என்றான்.

மற்றொருவன்:—"ஆம் அடியோடு வெளியிடப் பட்டோம்" என்றான்.

கடைசியில் ஹீரோஜி என்ற பிச்சைக்காரன் "ஆகா! அடியோடு தலைகீழாய்க் கவிழ்க்கப்பட்டோம்" என்றான்.

செல்வநாதன் அவர்களை நோக்கிப் புன்னகையோடு,

ஆ! நண்பர்களே! இப்போது உங்கள் மனக்கலவரத்தால் உண்டான விகாரங்கள் உங்கள் முகத்தில் கண்ணடி போல் விளங்குவதால் உங்கள் உருவங்கள் என்ன இலட்

சனமாய்ப் பிரகாசிக்கின்றன தெரிகிறதா? ஆ! இச்சமயம் உங்களுக் குடந்தையாயிருந்து மிக்க கஷ்டப்பட்டு என்னை நயவஞ்சகம் செய்து மயக்கி இங்கு வரும்படிச் செய்ய முயன்ற அந்த நீலாள்மட்டும் இச்சமயம் இங்கிருந்தால் மிக்கவேடிக்கையா யிருக்கும்.

உங்களுடைய கூட்டாளி தானப்பன் என் வீட்டிற்குச் சென்றிருக்கிறான். என்று கருதுகிறேன். அவன் என்வீட்டி லிருக்கும் என்னுடைய இரகசிய விஷயங்கள் எழுதப்பட் டிருக்கும் நோட்புத்தகங்களை எடுத்துவரப் போயிருக்கிறான். ஆனால் பாபம் அவன் மிக்க வெறுப்போடு திரும்பி வரு வான்" என்றான்.

இம்மொழிகளைக் கேட்ட அத்துஷ்டர்கள் மிக்க கல வரமும் திகிலும் அடைந்தார்கள். பக்கிரி பொன்னன் மனதை யொருவாறு தைரியப் படுத்திக்கொண்டு செல்வ நாதனை நோக்கி,

"நீர் கூறுவது எங்களுக்கு சமிஸ்கிருதம்போலிருக்கிறது. எங்களுக்குள் சதியாலோசனையாவது வேறெவ்வித ஆலோ சனையாவது கிடையாது" என்றான்.

செல்வநாதன்:—நீங்கள் மறுதலிப்பதில் சற்றும் பயனில்லை. இந்த வேளைக்கு இவ்வறைக்குப் பின்பக்கமுள்ள தாழ் வாரத்தில் ஒளிந்து கொண்டிருப்பேனென்றும் அப் போது வந்து என்னைக் கொலை செய்யலாமென் றும் தீர்மானித்திருந்தீர்கள். உங்களுக்கு அவ் வளவு கஷ்டம் கொடுக்கலாகா தென்று நானே இம்மாதிரி நேராய் வந்து விட்டேன். உங்கள் கூட்டாளியாகிய அக்கொலைபாதகன் என் அறையில் கள்ளத்தனமாய் நுழைந்து நான் எழுதி வைத்திருக்கிற இரகசியங்களைக் கண்டவரையில் எனக்கு இந்நகரில்

நடக்கிற இரகசியங்களில் யாவும் தெரியும் என்று அறிந்துகொண் டிருக்கலாம். இன்னொரு சங்கதியைக் கேட்டால் நீங்கள் பின்னும் வியப்படைவீர்கள். அதென்ன வெனில், ஸர்தார் சூரியநாயகம் மாளிகையில் தீப்பற்றிய காரணம் எனக்கு நன்றாய்த் தெரியும்" என்று அவர்களை உற்றுநோக்கிக் கூறினான். இவ்வார்த்தைகளைக் கேட்டதே அக்கள்ளர்களுக் குண்டான திகிலும் கோபமும் சொல்ல முடியாது. பக்கிரி பொன்னன் மிக்க கோபமடைந்து,

"ஆகா! இனி யார் நம்மைக் காட்டிக் கொடுத்த தென்பதில் எள்ளளவும் சந்தேகமேயில்லை" என்றான்.

ஜாலக்:—"எள்ளளவும் சந்தேகமே யில்லை" என்றான்.

செல்வ:—சற்று பொறுமையா யிருங்கள். இதை நான் எப்படி யறிந்து கொண்டே னென்பது உங்களுக்குத் தெரியாது. எனக்கு இரத்னபுரியில் நடக்கும் எல்லா விஷயங்களும் தெரியும். எவ்வளவு இரகசியமானவைகளா யிருந்தாலும் சரி. ஸர்தார் சூரியநாதன் வீட்டில் தீப்பற்றியதற்கு மூலகாரணம் நீங்கள் இருவர்களும் தானப்பனுமே. நீங்கள் அம்மாளிகையின் பின் பக்கமுள்ள கட்டிடத்தில் நுழைந்து சென்றீர்கள். தற்செயலாய் உங்கள் கையிலிருந்த இராந்தல் தவறி விழுந்து விட்டதால் வைக்கோல் பற்றிக் கொண்டது. ஆ! மூடர்களே! நான் கூறுவது உண்மையா பொய்யா? இத்தகைய சங்கதிக ளெல்லாம் எனக்குத் தெரிந்திருக்கும்போது, நீங்கள் செய்த கொலைபாதகச் சதியாலோசனை தானா எனக்குத் தெரியாது?

இச்சங்கதிகளைக் கேட்டதே கள்ளர்கள் பெரும்பீதியடைந்தார்கள். செல்வநாதன் அக்குற்றத்திற்காகக் குற்ற

வாளிகளைப் பிடித்துச் செல்லவே வந்திருக்கிறு னென்றும், ஆகையால் அவன் ஆட்கள் அச்சமயம் வீட்டைச்சுற்றி சூழ்ந்து கொண்டிருக்கிறுர்க ளென்றும் நம்பிக்கொண்டார் கள். அதனுலேயே உடனே யவனுக்குத் தீங்குசெய்ய அவர்களுக்குத் துணிகா முண்டாகவில்லை.

செல்வநாதன் அவர்களை நோக்கி "ஆகா! கள்ள நாய் களைப்போல் மிரள மிரள விழிக்கும் உங்களுக்குச் சற்றே னும் இரக்கம் காட்டப் பிரியமேயில்லை. ஆயினும் இப் போது அக்குற்றத்திற்காக உங்களைப் பிடித்துத் தண்டிக்க எனக்குப் பிரியமில்லை. ஏனெனில் அதற்குக் காலமிருக் கிறது. இப்போதிருக்கும் ருசுவை நான் பகிரங்கத்திற்குக் கொண்டுவர அனுகூலப்படாது. உங்களுக்குக் கொருபுத்தி கூறுகிறேன். அதாவது நீங்கள் தப்பித்துக்கொள்ள வேண்டு மாயின் உடனே நீங்கள் இவ்வூரை விட்டுப் பிரிந்து போய் விட வேண்டும். அப்படிக்கின்றேல் கடைசியில் உங்களைக் கட்டாயம் தூக்குமரத்தடியில் நிற்கும்படி செய்வேன் என் பது உண்மை. நீங்கள் புத்திசாலிகளானுல் மேற்கண்ட புத்திமதிப்படி நடந்து கொள்வீர்கள்" என்ருன்.

கள்ளர்கள் தங்கள் துஷ்டத் தொழிலில் எவ்வளவு தைரிய சாமார்த்திய முடையவர்களேனும் உண்மையில் அறிவு குறைவானவர்களே. ஆகையால் அவன் கூறிய எச்சரிக்கையைக் காற்றில் பறக்கவிட்டு, "இவன் எப்போது இச்சமயம் நம்மைக் கைதுசெய்ய வரவில்லையோ தனியா கவேதான் வந்திருப்பானுதலால் நாமேன் இவனை யிங்கேயே கொன்றுவிடலாகாது" என்று கருதிக்கொண்டு, செல்வ நாதனை நோக்கி,

"இப்போது நாங்கள் உன்னை யிங்கேயே கொன்று விட்டா லென்ன" என்று கூறினுர்கள்.

செல்வநாதன் கலகலவென்று நகைத்துக்கொண்டே "அட மூடர்களே! அப்படி யேமாந்துவிடாதீர்கள். நான் தனியாய் இங்கு வந்து நுழைவேன் என்று நம்பிக்கொண்ட உங்கள் புத்தியே புத்தி. நீங்கள் அப்படி எனக்குத் தீங்கு செய்யக் கருதினால் முதலாவது உங்களைத் தட்சணம் சுட்டு வீழ்த்தி விடுவேன்'' என்று கூறிக்கொண்டே ஜேபியில் இருந்த தன் இருகரங்களையும் இரண்டு கைத்துப்பாக்கிக ளோடு வெளியிலெடுத்து நேராய் அவர்கள் முகத்தின் முன் நீட்டி இதன் சத்தம் கேட்டதே என்னுடைய ஆட்களில் குறைந்தது ஆறு பேர் ஆயுதங்களோடு உடனே உள்ளே நுழைந்துவிடுவார்கள். இங்கிருந்து நீங்கள் நேராய்த் தூக்கு மரத்தடிக்குச் செல்லவேண்டியதே. முன்னடி யுண்மை யைக் கூறிவிட்டேன். இனி உங்கள் தைரியப்படி நடவுங் கள். இனி பக்கிரி பொன்னன்! நான் வந்தவேலை முடிந்து விட்டது. நீ யெழுந்து முன்னே சென்று கதவைத்திற. நான் செல்லவேண்டும்'' என்றான்.

நேயர்களே! இதைக் கேட்டதே அக்கள்ளர்கள் மனோ நிலைமை யெவ்வாறிருக்குமென்பதை நாம் கூறவேண்டுவதே யில்லை. அவர்கள் ஆவி சோர்ந்து தலைகளைக் கவிழ்த்துக் கொண்டார்கள்.

செல்வநாதன் வீட்டை விட்டுச் செல்வதாய்க் கூறி யதைக் கேட்டதே பக்கிரி பொன்னன் மிக்க சந்தோஷ மடைந்து எழுந்து இராந்தலைக் கரத்தில் பிடித்துக்கொண்டு அவனுக்கு முன்னே வழிகாட்டிச் சென்று வீதியின் கத வைத் திறந்து செல்வநாதனை வெளியில் விட்டு இராந்தலை யணைத்துவிட்டுச் சற்று நேரம் வாசற்படி யருகிலேயே நின்று வீதியை நோக்கிக்கொண்டிருந்தான். செல்வநாதன் வீதியின் கோடியில் செல்வதற்குள் ஒருவர்பின் ஒருவராய்

ஏழெட்டு பெயர்கள் வீதியின் மறு முனையிலிருந்து வீதி வழியே செல்வநாதன் சென்ற திக்கே செல்வதைக்கண்டான். அவர்களில் ஐந்தாறு பெயர்கள் துப்பறியும் போலீஸார்களென்று அவர்கள் முகத்தைக்கண்டு (அடையாளம்) தெரிந்துகொண்டான். "நாம் சற்று முட்டாள்தனமாய் நடந்து கொண்டிருந்தால் பெரிய ஆபத்தில் சிக்கிக்கொண்டிருப்போம்" என்று அவன் புத்தியில் நன்றாய்ப் பட்டுவிட்டது.

அவன் கதவை மூடிக்கொண்டு உள்ளே சென்றதும் தன் நண்பர்களை நோக்கி, மிக்க ஆத்திரத்தோடு, "ஆகா! பூரணமாய்க் காட்டிக் கொடுக்கப்பட்டோம்" என்று கூவினான்.

ஜாலக்:—' ஆம்; சற்றும் சந்தேகமின்றி; அதுவும் நீலாளால். அவள் இங்கிருந்து நோராய் பாப்பம்மாள் வீட்டிற்குச் சென்றேயிராள். எங்கோ ஓடிவிட்டிருப்பாள். எப்படியிருந்தாலும் நான் போய் பார்த்து வருகிறேன்" என்றான்.

பொன்னன்:—"நண்பனே! வேண்டாம். அவசரப்படலாகாது. செல்வநாதன் நம் விஷயத்தில் என்ன ஏற்பாடு செய்திருக்கிறானோ தெரியாது. எதற்கும் தானப்பன் போனவன் வரட்டும். அவன் என்னசங்கதி கொண்டு வருகிறான் பார்ப்போம்'' என்றான்.

ஜாலக்காரன் அவ்வாறே யொப்புக் கொண்டபின் யாவரும் குடிக்கத் தொடங்கினார்கள். சற்றுநேரங் கழித்து தானப்பன் திரும்பிவந்தான்.

அவன் முகத்தில் தோன்றிய கோபமும் வெறுப்பும் இகிலும் இன்னவித மென்று கூறமுடியாது. அவன் கள்ளர்களிருக்கும் அறைக்குள் நுழைந்ததும் பெருமூச்சு விட்டுக்கொண்டு பேசவும் முடியாதவனாய் ஒருநாற்காலியில் தடாலென்று உட்கார்ந்தான். அப்போது மணி இரவு பனிரண்டாயிற்று. அவன் அவ்வாறு உட்கார்ந்ததும் மூச்சு

திணரிக்கொண்டு மிக்க ஆத்திரத்தோடு ஆவேசங்கொண் டவன்போல் தன் நண்பர்களை நோக்கிப் புலிகர்ச்சிப்பது போல் "இங்கு நடந்த சங்கதி யென்ன? சீக்கிரம் கூறுங் கள்" என்றான்.

பக்கிரி பொன்னன் செல்வநாதன் வந்தது முதலிய சங் கதிகளை நடந்தது நடந்தபடிச் சுருக்கமாய்க் கூறியபின் தானப்பனை நோக்கி "இனி நீ சென்ற சங்கதி யென்னமாய் முடிந்தது? அதைக்கூறு" என்றான்.

தானப்பன் மிக்க ஆத்திரத்தோடு, "ஓ கடவுளே என் கோபம் என்னைப் பேசவிடாதென்று நினைக்கிறேன். ஆயி னும் என்னால் கூடியவரை சமாளித்துக்கொண்டு கூற முயல் கின்றேன். நான் நேராய்ச் செல்வநாதன் வீட்டிற்குச் சென்று உள்ளே நுழைந்து அவ்வீட்டுக் காரியஸ்திரை நோக்கி ஒன்று மறியாதவன்போல் 'செல்வநாதர் வீட்டி லிருக்கிறாரா' என்று கேட்டேன். கிழவி "ஆ! அவர் வீட்டி லில்லையே. நீ தானப்பன் என்று நினைக்கிறேன்" என்றாள். நான் ஆம் அம்மா என்பெயர் தானப்பன் என்றும் கூறுவ துண்டு. நான் அவர் வீட்டிலில்லாததைப் பற்றி மிக்க விச னப்படுகிறேன். ஏனெனில் நான் ஒரு முக்கியமான விஷ யத்தைப்பற்றி யவரிடம் பேசவேண்டும்" என்றேன். கிழவி "அவர் ஜாடித்தீவிற்கு ஒரு வேலையாய்ச் செல்ல வேண்டுமென்று கூறிச் சென்றார்" என்றாள்.

எனக்கு உண்மையில் அதைக்கேட்கச் சந்தோஷமா யிருந்தது, நான் மிக்க ஆவலோடு "ஏனம்மா! அவர் வர நேரமாகுமோ?" என்றேன். கிழவி "அவர் வரவா? இரண்டு மணி நேரத்தில் வருவதாய்க் கூறிச்சென்றார். நீ சென்று மறுபடி வரலாகாதோ? அல்லது ஏன் அவர் வருமட்டும் அறையில் உட்கார்ந்திருக்கலாமே" என்றாள்.

நான் அதற்குச் சம்மதிக்க மயங்குபவன்போல் சற்று நிதானத்தோடு "அப்படித்தான் செய்யலாமென்று கருது

கிறேன்" என்றேன். கிழவி உடனே யென்னை யழைத்துப் போய் முன் நான் காத்திருந்த அதே அறையில் விட்டுச் சென்ருள்.

நான் சுமார் கால் மணி நேரம் பேசாமலிருந்தேன். பிறகு எழுந்து புத்தகங்கள் வைத்திருக்கும் அந்த அறையை நோக்கிச் சென்றேன். சென்று அந்த அறைக்குச் செல்லும் படிக்கட்டுகளின் வழியே பாதி வழி யேறினேன். உடனே மேலே யிருக்கும் அறையின் வாயிற்படி யருகிலிருந்து தீபவொளி கிளம்பியது. அய்யோ சனியனே அதை யென்னவென்று கூறுவேன். அவ்வாயிற் படியில் மூன்று துப்பறியும் போலீஸார் உட்கார்ந்துகொண்டிருந்தார்கள் ஒவ்வொருவரும் கையில் கைத்துப்பாக்கியைப் பிடித்துக்கொண்டு என்னை நோக்கி நீட்டிய காங்களோடு, 'ஆகாகா! நன்ருய் வலையில் சிக்கிக்கொண்டாய்'' என்று கூறி கலகலவென்று நகைத்தார்கள். எனக்கு அச்சமயம் எப்படி யிருந்திருக்குமென்பதை நீங்களே சிந்திக்கலாம். அச்சமயம் என் மனம் ஒரு கொடிய எரிமலைபோலிருந்தது. அப்போது மட்டும் தக்க கருவிகள் என் கையிலிருந்திருந்தால் இவ்வுலகத்தையே யழித்துவிட்டிருப்பேன். ஆயினும் நான் என்ன செய்வது? சற்று நேரம் வாய்திறக்க முடியாமல் நட்ட மரம்போல் நின்று விழித்தேன். அவர்களில் ஒருவன் "ஆ! ஹா! தானப்பா! இந்நேரத்தில் இங்கு என் வந்தாய்?'' என்ருன். நான் "என்னமோ திகைப்பூண்டு மிதித்தவன்போல் எங்கு போகிறே மென்று தெரியாமல் வந்து விட்டேன். நீங்கள் இந்நேரத்தில் இங்கு என்ன செய்கிறீர்கள்?'' என்று என் [illegible] க[illegible]த்தோடு அடக்கிக்கொண்டு [illegible]டேன். அதற்கு [illegible]லீஸ் காரன்,

186549
சென்னை-600 008

மாதவி மாதவன் 2-பாகம்

ர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக்
காடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பி
து; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள்
பாதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு
ாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

இரத்தினபுரி ரகசியம் 3-பாகம் விலை ரூபா 6

அமராவதி 2-பாகம்.

ஆரணி-குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான டக்கையும், ஊக்கமு முடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

இராஜாமணி

அல்லது

ஓர் அபூர்வ மர்மம்.

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு முரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம் அவரை யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி பிள்ளை, மணந்து கொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும் படிப்போர் மனத்தைக் கவரக்கூடியனவாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

"ஆனந்தபோதினி"

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915ஞ் ஜூலைமீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலும் மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்ட மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில் 80 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற் கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-8-0 மாதிரிக்காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

	ரூ.	அ.		ரூபா	
இரத்தினபுரி இரகசியம் 3-பாகமும் ...	6	0	தினகரசுந்தரி	1	0
பவளத்தீவு 2-பாகமும் ...	3	0	தபால்கொள்ளைக்காரர்	0	14
கற்கோட்டை ...	2	0	ரத்தினபாய் ...	1	12
மின்சார மாயவன் ...	1	8	வீரநாதன் ...	0	12
தேவசுந்தரி ...	1	4	குணசுந்தரன் ...	0	12
கனகபூஷணம் 2பாகம் ...	3	8	மஞ்சள் அறையின் மர்மம்	1	8
இராஜாமணி ...	2	0	கமலசேகரன் ...	1	12
ஆனந்தஸிங் ...	2	0	பூங்கோதை ...	0	10
மதனபூஷணம் ...	1	0	இந்திராபாய் ...	2	8
ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் ...	9	10	அமராவதி 2 பாகமும்	4	0
			மதனும்பாள் 2 பாகமும்	3	0
			லோகநாயகி	1	0

விலாசம்: மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
6, லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.